Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | மார்கழி-04 | 19-12-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -305

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10930) T.P: 024-222 4247



- தாயகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு -

## கனேடிய தமிழ் வானொலி மூலம் 72,225 கனேடிய டொலர் சேகரிப்பு!

கடந்த சில நாட்களாக தமிழர் தாயகத்தில் இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு கனேடிய தமிழ் வானொலி மூலம் நேயர்கள், வர்த்தக நிறுவனங்கள், கலைஞர்கள் இணைந்து மூன்று நாட்கள் தொடர்ச்சியாக நிதி சேகரிக்கப்பட்டது. நேற்று முன்தினம் வெள்ளி இரவு 9.00 மணிவரை கனேடிய தமிழ் வானொலியின் கலையகத்திற்கு வந்து சேர்ந்த நிதியான 72,225 கனேடிய டொலர்களை முதற் கட்டமாக 'Casth Point' துரித பணமாற்று சேவை யூடாக நேரடியாகத் தாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அங்குஅனுப்பப்பட்ட நிதி 60 இலட்சம் இலங்கை ரூபாய்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு கொழும்பில் வைத்து கையளிக்கப்பட்டது. இந் நிதியில் கொழும்பிலிருந்து உடனடியாக பாதிக்கப்பட்ட தாயக மக்களிற்கு நிவாரண உதவிகள் அனுப்பப்படுகின்றன என்று தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் பணிப்பாளர் றெஜி கனேடியத் தமிழ் மக்களிற்கு தெரிவித்துள்ளார். தொடர்ந்து இங்கு சேகரிக்கப்படும் நிதி தாயகத திற்கு அனுப்பி வைக்கப்படும். கருணைஉள்ளம் படைத்த கனேடிய மக்களிற்கு கனேடியத் தமிழ் வானொலி நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

- மட்டு அரசடிப் பகுதியில் -

## நிறுத்தாது சென்றதாகக் கூறி உந்துருளி மீது பொலிசார் சூடு

மட்டக்களப்பு அரசடி அரிசி ஆலைச் சந்தியில் நேற்றிரவு பொலிசாரின் உத்தரவை மீறிச் சென்ற உந்துருளி மீது பொலிசார் மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தையடுத்து அப்பகுதியில் சில நிமிடங்கள் பதட்ட நிலை காணப்பட்டது.

மட்டக்களப்பு நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் அண்மைக் காலமாக இடம் பெற்று வரும் துப்பாக்கிச் சூடு மற்றும் கைக்குண்டு வீச்சு சம்பவங்களையடுத்து 10 இற்கும் மேற்பட்ட விசேட ரோந்துக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்கள் வீதிகளில் திடீர் திடீரென சோதனைகளை மேற்கொண்டு வருகின்றன. கொட்டும் மழையிலும் இப்படியான சோதனை நடவடிக்கைகள் நடை பெற்று வருகின்றன. நேற்று மாலை உந்துருளியொன்றில் 2 இளைஞர்கள் சென்ற சமயம பொலிசார் சோதனைக்காக (12ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுவார்த்தையை விரைவில் ஆரம்பிப்பதென சுதந்திரக் கட்சி மத்தியகுழுவில் முடிவு!

## தடையாகவுள்ள விடயங்கள் குறித்து ஆளும் கூட்டுக்கட்சிகளுடன் பேசவும் தீர்மானம்

(கொழும்பு)

**விடுதலைப்புலிகள் நோர்வே ஊடாக அனுப்பியுள்ள நிலைப்பாட்டின் அடிப்படையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு நேற்று முன்தினம் கூடித் தீர்மானித்துள்ளது. இதேவேளை பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்குத் தடையாகவுள்ள விடயங்கள் பற்றி ஜே.வி.பி.யுடன் பேச்சு நடத்தவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.**

கட்சியின் தலைவியான சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் மத்திய குழு நேற்றுமுன்தினம் கூடி தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து விரிவாக ஆராய்ந்தது. குறிப்பாக சமாதானப் பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டிய தன் அவசியம் பற்றியும் அதற்கு தடையாக உள்ள விடயங்கள் பற்றியும் மத்திய குழு ஆராய்ந்தது. இந்த விடயத்தில் ஜே.வி.பி.யின் போக்கு குறித்து இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டு தலைமை நாடுகள் வெளியிட்டுள்ள அதிருப்தி தொடர்பாகவும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. இதனையடுத்து மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றியுள்ள மத்தியகுழு விரைவாக பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு தடையாக உள்ள விடயங்கள் பற்றி ஜே.வி.பி. உட்பட சகல ஆளும் கூட்டு கட்சிகளுடனும் பேசுவதென்று மற்றுமொரு தீர்மானத்தையும் நிறைவேற்றியுள்ளது.

## ஐ.தே.க வுடன் இணைந்து செயற்படுவதிலும் ஜே.வி.பி யுடன் பணியாற்றுவது இலகு!

சனாதிபதி சந்திரிகா கருதுகிறாராம்

சமாதான முயற்சிகளுக்கு ஜே.வி.பியின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியும் என சனாதிபதி நம்பிக்கை கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து செயற்படுவதை விட ஜே.வி.பியுடன் பணியாற்றுவது இலகுவானது என சனாதிபதி கருதுவதாகவும் இந்த விடயம் தொடர்பில் ஜே.வி.பியுடன் முக்கிய பேச்சுவார்த்தை ஒன்றில் ஈடுபட சனாதிபதி தயாராகிவருவதாகவும் தெரியவந்துள்ளது.

சமாதான முயற்சிகள் தொடர்பில் அரசாங்கத்தின் இரு பிரதான கட்சிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை மெற்கொள்வது குறித்து அரசாங்கம் ஆராய்ந்துவருவதாகவும் ஒரு சில விடயங்கள் தவிர ஏனைய விடயங்களில் இருதரப்பு உடன்பாடுகாணப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.இருந்த போதிலும் உடன்பாடு காணப்படாத விடயங்களே பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு தடையாக உள்ளது என நோர்வேயின் சமாதான தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் சுட்டிக் காட்டி (12ஆம் பக்கம் பார்க்க)

## மலையகத்தில் தீவிரவாத சக்திகள் என்ற குற்றச்சாட்டுக்கு ம.ம.மு கண்டனம்

மலையகத்தில் தீவிரவாத சக்திகள் ஊடுருவியுள்ளதாக மலையக தொழிற்சங்கம் ஒன்று தெரிவித்துள்ள குற்றச்சாட்டு உண்மைக்கு புறம்பானது என்று மலையக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

நுவரெலியாவில் இடம்பெற்ற விருந்து நிகழ்ச்சி ஒன்றில் பொலிசாரையும், தோட்ட நிர்வாகிகளையும் சந்தித்து இந்த விடயத்தை மலையக தொழிற்சங்கம் ஒன்றின் முக்கியஸ்தர்கள் தெரிவித்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மலையகத்தில் அரசாங்கத்திற்கு எதிரான சக்திகள் ஊடுருவி உள்ளதாகவும் சுமார் 250 இளைஞர்கள் இவ்வாறு மலையகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மலையக தொழிற்சங்கம் ஒன்று படைத் தரப்புக்கு அறிவித்துள்ளது. இதனை அடுத்து மலையகத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் கருத்து (12ஆம் பக்கம் பார்க்க)

## நோயாளர் காவு வண்டி சேதம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் நேற்று இடம் பெற்ற வீதிவிபத்தின் போது நோயாளர் காவு வண்டி ஒன்று சேதமடைந்து.நேற்று மாலை 6.00 மணியளவில் கிளிநொச்சி (12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு த.பு. கழகம் உலருணவு வழங்கல்

திருகோணமலை மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நிவாரணப் பொருட்களை வழங்கிவருகின்றது. இதன்போது திருமலை மாவட்டத்தின் வட பகுதியிலே அமைந்துள்ள குச்சவெளிப்பிரதேசத்திற்குட்பட்ட கல்லறுவ என்ற இடத்தைச் சேர்ந்த 38 சிங்களக் குடும்பங்களும் இந்த உலர் உணவு நிவாரணப் பொருட்களை (12ஆம் பக்கம் பார்க்க)




## உழவு இயந்திரப் பெட்டியிலிருந்து வீழ்ந்து இராமநாதபுரத்தில் சிறுவன் மரணம்

(அலுவலக செய்தியாளர்)

நேற்று இராமநாதபுரம் பகுதியில் உழவு இயந்திர இழுவைப்பெட்டியிலிருந்து வீழ்ந்து சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

மேற்படி சம்பவம் பற்றி தெரியவருவதாவது,நேற்று மதியம் 12.30 மணியளவில் இராமநாதபுரத்திலிருந்து தருமபுரம் நோக்கிச் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரத்தின் இழுவைப் பெட்டியிலேறி பெட்டியின் முன்பகுதிக்கு செல்வதற்காக மேலே நடந்து சென்று கொண்டிருந்த இச் சிறுவன் பெட்டியிலிருந்து கீழே விழ சக்கரம் இவரது உடலில் (12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. களுவன் கேணியில் இளைஞர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு களுவன்கேணியில் நேற்றுமுன்தினமிரவு இளைஞரொருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சிவகுரு தியாகராஜா (வயது-24) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இரவு உணவின் பின்பு வீட்டிலுள்ளவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த சமயம் அங்கு வந்த இரண்டு நபர்கள் வெளியே நின்று பெயர் கூறி அழைத்ததாகவும், அந்நேரம் அவர் வெளியே சென்ற சமயம் துப்பாக்கிதாரிகள் (12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### வீடுவிற்பனைக்கு

புதுக்குடியிருப்பில் சுவையூற்றுக் கருகாமையில் 1/4ஏக்கர் காணி வீடு கிணறு, மலசலகூடம் என்பன வற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு உரிமையாளர் ''இனியவள் அழகுமாடம்'' முல்லைத்தீவு. உரிமையாளர் இன்பம் மணிக்கூட்டுத்திருத்தகம், புதுக்குடியிருப்பு. (5071)

### புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

அமுதன் கல்வி நிலையம், சயன்ஸ் கோல் கல்விநிலையம் ஆகிய இரு கல்வி நிலையங்களில் 18.12.2004 அன்று சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகியுள்ளது. ஆண்டு 06தொடக்கம் 11ஆம் ஆண்டு வரையான புதிய வகுப்புக்கள் நடைபெறவுள்ளது என மாணவர் களுக்கு அறியத் தருகின்றனர். நிர்வாகி. (5072)

### கேக் செய்து கொடுக்கப்படும்

பண்டிகைக்கால மற்றும் சம்பிர தாய பூர்வவிழாக்களுக்கான சகல வகையான கேக் வகைகளும் விருப்பத்திற்கேற்றபடி செய்து கொடுக்கப்படும். தொ[illegible]களுக்கு சித்திரா,கானான், தரு[illegible]ம்.(4948)

### விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு இல.4 சிறி 4611 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி எஸ்.அருள்நாதன், இல 117, நாதன்ஸ் ,குட்செட் செட்றோட் வவுனியா. (5410)

## சாவு அறிவித்தல்

### இளையதம்பி சண்முகலிங்கம்

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் மல்லாவி இல.571 வளநகரை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி சண்முகலிங்கம் 17.12.2004 அன்று காலமாகிவிட்டார். இறுதிக் கிரியைகள் 17.12.2004 மாலை 4.00 மணியளவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ச.ஜெகநாதன்
மகன்**

(4143)

## கிளிநொச்சி மருத்துவ சங்கம்

## Kilinochchi Medical Association

* "ZOA" நிறுவனத்தால் அமைக்கப்பெற்ற "நோயாளர் பொழுது போக்கு மைய" திறப்பு விழா
* "நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பிற்கு உள்ளான நோயாளர்களிற்கான அறிவுரைகள்" நூல் வெளியீடு.
* ஒளிவிழா, மருத்துவமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கௌரவிப்பு நிகழ்வு.
* Inauguration Ceremony of entertainment Park for Patient constructed by "ZOA"
* Dealing with "Basic information about chronic renal failure" release of booklet.
* Lighting ceremony Welcome presentation to our staffs.

கிளி/மாவட்ட வைத்தியசாலை, Kilinochchi, District Hospital.

| ஞாயிறு, 19 மார்கழி 2004<br>மாலை 6.30 மணி | Sunday 19 December 2004<br>Evening 6.30 pm |
|---|---|

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**All are wel rome**

(சி.10982)

## யாழ்ப்பாணம் - மாநகரசபை

### சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் ~ 2005.

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றை 2005.01.01 ஆம் திகதி முதல் 2005.12.31 ஆம் திகதிவரையான ஒருவருட காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளராகிய என்னால் 2004.12.24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் யாவும் யாழ்.மாநகர சபையில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2004.12.24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும்.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் 2004.12.24 வெள்ளிக்கிழமை பி.ப.2.30 மணிக்கு கேள்விச் சபையால் திறந்து பரிசீலிக்கப்படும்.

இவை தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படின் அலுவலக நேரத்தில் நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

| பொதுச்சந்தைகள் | | ணப்பணம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|
| பாஷையூர் சந்தை | | 2500.00 | 39250.00 |
| புங்கங்குளம் சந்தை | | 2500.00 | 16500.00 |
| கொழும்புத்துறை சந்தை | | 1000.00 | 3300.00 |
| **சைக்கிள் பார்க்** | | | |
| கஸ்தூரியார் வீதி துவிச்சக்கரவண்டி பாதுகாப்புநிலையம் | | 2500.00 | 40550.00 |
| **இறைச்சிக்கடைகள்** | | | |
| பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 2500.00 | 94600.00 |
| பண்ணை கோழிக்கடை | இல.07 | 2500.00 | 38500.00 |
| பாஷையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 2500.00 | 70300.00 |
| குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 5000.00 | 214750.00 |
| குருநகர் ஆட்டிறைச்சிக்கடை | இல.07 | 2500.00 | 10500.00 |
| அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.02 | 2500.00 | 107500.00 |
| புங்கங்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 2500.00 | 182305.00 |
| நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.10 | 2500.00 | 6800.00 |
| நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல11 | 1000.00 | 3900.00 |
| நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 1000.00 | 3900.00 |
| மானிப்பாய் வீதி (ஜின்னாவீதி) ஆட்டிறைச்சிக்கடை | | 2500.00 | 42450.00 |
| நரிக்குண்று மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5000.00 | 275000.00 |

**கலாநிதி க.குணராசா,
ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்**

**17.12.2004** (சி.11041)

## காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லம்

### பணிநிலை வேண்டுகை

**பதவிகள்**

01. **கல்வி நிர்வாகி.**
    (A/L 03 பாட சித்தி - வயது 30 இற்கு மேல் இருக்க வேண்டும்)
02. **ஆசிரியர்கள்.**
    (சகல பாடங்களுக்கும் - A/L 03 பாட சித்தி - 06 மாதம் பயிற்சி வழங்கப்படும்)
03. **விஞ்ஞான கூட உதவியாளர்.**
    (A/L இல் கணித விஞ்ஞானப் பிரிவில் 02 பாடத்திற்கு மேல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்)
04. **தட்டெழுத்தாளர்.**
    (A/L 03 பாடச் சித்தியும் -பயிற்சி சான்றிதலும் தேவை)
05. **ஓவியர்கள்.**
    (காட்டூன் சித்திரம் கீறக்கூடியவராகவும், கணினி அறிவும் நன்று)
06. **பராமரிப்பாளர்கள்.**
    (ஆண்,பெண் இருபாலரும் - 30 வயதிற்கு மேல்)

நேர்முகத்தேர்வு:-

| 23.12.2004 | 24.12.2004 |
|---|---|
| காலை 09.00-பி.ப 2.00 மணி வரைக்கும் | காலை 9.00 பி.ப 2.00 மணி வரைக்கும் |
| காந்தரூபன் அறிவுச்சோலை, புதியவளாகம், மலையாளபுரம், கிளிநொச்சி. | காந்தரூபன் அறிவுச்சோலை, கைவேலி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |

**குறிப்பு:-**

01. விண்ணப்பம் நேர்முகத்தேர்வு அன்றே பெறப்படும்.
02. தகைமைச் சான்றுதல்களுடன் சமுகம் தரவும்.
03. குறித்த நாளில் தோற்ற முடியாதவர்கள் முன்கூட்டியே கடிதமூலம் தெரியப்படுத்தவும்.

நிர்வாகச் செயலகம்,
காந்தரூபன் அறிவுச்சோலை,
சிறுவர் இல்லம். (5416)

## சாவு அறிவித்தல்

### அமரர்

### கதிரவேலு சபாரத்தினம்

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் இல.175, பாண்டியன் குளத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு சபாரத்தினம் அவர்கள் கடந்த 16.12.2004 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு பார்வதியின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற இராமலிங்கம் சீதேவிப்பிள்ளையின் பாசமிகு மருமகனும், தில்லை நாயகியின் அன்புக் கணவரும், கிருபாகரன், ஜெயகரன், கவிதா, வேணுகா, உமாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும்.

காமாட்சி(இராமநாதபுரம்), சரஸ்வதி(கனடா), காலஞ்சென்ற இராசரத்தினம் அருமைநாயகம்(கனடா), பரமேஸ்வரி(இராமநாதபுரம்), முத்துநாயகம் (இராமநாதபுரம்), சிவசுப்பிரமணியம் (இராமநாதபுரம்), தர்மராஜா (இராமநாதபுரம்), புஸ்பராணி(கனடா), சுந்தரலிங்கம்(சுவிஸ்), பத்மாவதி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமிர்தாம்பிகை (ஆசிரியை), யோகநாதன்(பாண்டியன்குளம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.12.2004) காலை 10.00 மணிக்கு இலக்கம் 165, பாண்டியன்குளம் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பாண்டியன்குளம் பாலியாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:-
அன்னாரின்
குடும்பத்தினர்.**

(சி.10984)

# ஜி–4 நாடுகளுக்கு வீட்டோ

## அதிகாரம் வழங்குவது கடினமானது

### ஐ.நா.செயலர் கொபி அனான்

**ஜி-4 நாடுகளுக்கு (இந்தியா, ஜப்பான், பிரேசில், ஜேர்மனி) வீட்டோ அதிகாரத்துடன் கூடிய நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து அளிப்பது கடினம் என்று ஐ.நா. பொதுச்செயலர் கொபி அனான் கூறியுள்ளார்.**

வோஷிங்டனில் கொபி அனான் அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா பாதுகாப்புச்சபையில் நிரந்தர உறுப்பினர் பதவி கோருவதைத் தவறு என்று யாராலும் கூறமுடியாது. அவர்கள் எந்த மாதிரியான கோரிக்கையை வைக்கிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் அது உள்ளது.

ஐ.நா சீர்திருத்தக் குழு தெரிவிக்கும் ஏதாவது ஒன்றை மட்டுமே உறுப்பு நாடுகள் தேர்ந்தெடுக்க வேண்டும். ஐ.நா பாதுகாப்புச் சபையில் 6உறுப்பு நாடுகளுக்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து அளிக்கலாம். ஆனால் அவற்றுக்கு வீட்டோ அதிகாரம் வழங்க முடியாது என்று அக்குழு பரிந்துரைத்திருந்தது.

பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர் பதவி அளிக்க வேண்டும் என்று சில நாடுகள் குழுவாகப் போராடி வருகின்றன. அதற்காக உறுப்பு நாடுகளின் ஆதரவையும் திரட்டி வருகின்றன. ஆனால், சில நாடுகளோ அவற்றைத் தடுக்கும் முயற்சியில் இறங்கியுள்ளன. பாதுகாப்புக் குழுவில் நிரந்தர உறுப்பினர்களை அதிகரித்தால் முக்கிய முடிவுகளை எடுப்பதில் தாமதம் ஏற்படும் என்று சில நாடுகள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. முக்கிய முடிவுகளை எடுப்பதற்குத் தாமதம் ஆனாலும் பரவாயில்லை. அனைத்து உறுப்பினர்களும் பங்கேற்று சனநாயக முறைப்படி பாதுகாப்புச்சபை இயங்க வழிவகை செய்ய வேண்டும்.




21-ஆம் நூற்றாண்டில் அடியெடுத்து வைத்துள்ள நிலையில் 1945 இல் உள்ளது போல அல்லாமல், புத்துணர்வு பெற்ற அமைப்பாக ஐ.நா எதிர்காலத்தில் செயற்பட வேண்டுமென்றார் கொபி அனான்.

# டார்பர் மோதல்களுக்கு ஆபிரிக்க யூனியன் கண்டனம்

டார்பர் பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக இடம்பெற்று வரும் தாக்குதல்கள் தொடர்பாகவும், இரண்டு வாரகாலத்தில் அப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவத்தினரை பலப்படுத்தும் முயற்சிகள் தொடர்பாகவும், ஆபிரிக்க யூனியன் கண்டனம் தெரிவித்துள்ளது.

24 மணிநேரத்திற்குள் இவ் இரு நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டுமெனவும் நேற்று தெரிவித்துள்ளது. இதனிடையே அமெரிக்காபிரிட்டன் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் என்பனவும் தீவிரமாக எச்சரித்துள்ளன.



சூடான் போராளிகள்

### அனான் பதவி விலக அமெ. செனட்டர்கள் வற்புறுத்து

# கொபி அனானுக்கு ஆதரவாக அணிசேரா இயக்கம் கடிதம்

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் பொறுப்பில் இருந்து கொபி அனான் விலக வேண்டும் என்று அமெரிக்க செனட்டர்கள் சிலர் கோரியுள்ள நிலையில் 114 நாடுகளை உறுப்பினராகக் கொண்ட அணிசேரா இயக்கம் அனானுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

அனானின் தலைமையில் முழு நம்பிக்கை இருப்பதாக அணிசேரா நாடுகளின் சார்பில் அவருக்கு வியாழக்கிழமை அனுப்பப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. தற்போது ஐ.நாவுக்கு ஏற்பட்டுள்ள மிரட்டல்களையும் சவால்களையும் சந்தித்து அமைப்பின் கொள்கைகளைப் பாதுகாக்க வேண்டும். அண்மைக்கால சம்பவங்கள் எவ்வகையிலும் உங்கள் கவனத்தைச் சிதறடிக்காது என்று நம்புகின்றோம் என்று கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

ஈராக்கில் எண்ணெய்க்கு உணவுத் திட்டத்தில் முறைகேடுகள் நடைபெற்றதால் கொபி அனான் பதவி விலக வேண்டும் என்று குடியரசுக் கட்சியின் செனட்டர்கள் சிலர் கோரினர். அவர்களின் கோரிக்கையை அமெரிக்க அரசு ஆதரிக்கவில்லை என்று வெளியுறவுத்துறை அமைச்சர் கொலின் பவல் கூறியுள்ளார். வியாழக்கிழமை வோஷிங்டனில் தம்மைச் சந்தித்த அனானிடம் அமெரிக்க அரசின் ஆதரவை பவல் தெரிவித்துள்ளார்.

# ஐரோப்பிய சமூகத்தில் துருக்கியை இணைக்கும் பேச்சுவார்த்தை ஒக்டோபரில்

ஐரோப்பிய சமூகத்தின் துருக்கியை அனுமதிப்பதற்கான பேச்சுவார்த்தைகளை அடுத்த ஆண்டு ஒக்டோபர் மாதம் மூன்றாம் திகதி ஆரம்பிப்பதற்கு சமூகத்தின் 23 நாடுகளும் உடன்பட்டுள்ளன.

இவ் விடயம் சம்பந்தமான ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கையில்:-

இந்நடவடிக்கை மூலம் ஐரோபபிய நாடுகளுக்கும், இஸ்லாமிய உலகிற்குமிடையில் பாலம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதென தெரிவித்துள்ளனர்.



துருக்கியை ஐரோப்பிய யூனியனில் இணைப்பது குறித்த அறிவிப்பையடுத்து சூடான் ஐரோப்பிய யூனியன் கொடிகளுடன் மகிழ்ச்சி தெரிவிக்கும் மக்கள்.

# ஆப்கான் சிறையிலிருந்து தப்பி ஓட கைதிகள் முயற்சி

ஆப்கானியத் தலைநகர் காபூலில் உள்ள முக்கிய சிறையான இசார்க்கியில் இருந்து கைதிகள் தப்ப முயன்ற சம்பவம் ஒன்றின் போது 6 பேர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அந்தச் சிறையின் மீது ஆப்கானியப் படையினர் ஒரு தாக்குதலை நடத்தியுள்ளனர். சிறையின் வளாகத்தினுள் நுழைந்த படையினர் ஒரு தாக்குதலை நடத்தியுள்ளனர். சிறையின் வளாகத்தினுள் நுழைந்த படையினர் கைக்குண்டுகளைச் செலுத்தும் ரொக்கெட்டுகள் மற்றும் சிறிய ஆயுதங்கள் மூலம் தாக்கியுள்ளனர். நேற்றுமுன்தினம் காலையில் மேற்கொள்ளப்பட்ட கைதிகளின் தப்புவதற்கான இந்த முயற்சியில் 6 பேர் கொல்லப்பட்டனர். சிறையைச் சற்றிவளைத்த படையினருக்கும் உள்ளே இருந்த இரு ஆயுதந்தாங்கிய கைதிகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இரண்டு பாகிஸ்தான் கைதிகளும், ஒரு ஈராக்கியரும் சேர்ந்து ஒரு சிறைக்காவலாளியைக் கொன்று அவரது ஆயுதத்தைப் பறித்துத் தப்பியோடும் முயற்சியைத் தொடங்கினர் என்று சிறை அதிகாரிகள் கூறினார்கள்.



பலஸ்தீன காஸா முனையில் சுரங்கப்பாதை இடிந்ததில் பலியான பலஸ்தீனர்களை தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இஸ்ரேலிய - பலஸ்தீன புல்டோசர்கள்.

## கட்டணம் அதிகரிப்பு

சுயஸ் கால்வாய் வழியாகச் செல்லும் கப்பல்களுக்கான கட்டணம் வரும் பெப்ரவரி முதல் உயர்கிறது. தற்போது உள்ள கட்டணத்தை அடுத்த ஆண்டு பெப்ரவரி முதல் 3 சதவீதம் உயர்த்த சுயஸ் கால்வாய் ஆணையம் முடிவெடுத்துள்ளது என்று அதன் தலைவர் அட்மிரல் அகமது அலி ஃபெடல் தெரிவித்துள்ளார்.

## ஷரோனின் கூட்டணியில் எதிர்க்கட்சி இணையும்

இஸ்ரேலின் எதிர்க்கட்சியான தொழிற்கட்சி பிரதமர் ஷரோனின் கூட்டணியில் அடுத்த வாரம் இணைந்து கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# ஒரு கோடி தேனீக்களை கொண்ட கூடுகளை ஏற்றி வந்த பார ஊர்தி கவிழ்ந்தது

### –கலிபோர்னியாவில் போக்குவரத்து பாதிப்பு

அமெரிக்காவில் ஒரு கோடி தேனீக்கள் அடங்கிய தேன் கூட்டை ஏற்றி வந்த பார ஊர்தி கவிழ்ந்ததால் போக்குவரத்துக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் 5இலட்சத்துக்கு அதிகமான ஏக்கரில் அல்மாண்ட் மரங்கள் பயிரிடப்படுகின்றன. இங்கு தேனீ வளர்ப்பதுதான் முக்கிய தொழில். உலகில் விநியோகம் செய்யப்படும் தேனீல் 80 சதவீதம இங்குதான் உற்பத்தியா கின்றன.

சமீப காலமாக இங்கு தேனீகள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் தேன் உற்பத்தியும் குறைந்து விட்டது. இதை சமாளிக்க லாஸ் வேகாசில் இருந்து 1 கோடி தேனீக்கள் அடங்கிய தேன்கூட்டை பாரஊர்தி மூலம் கொண்டு வந்தனர். ஆனால் அந்தப் பாரஊர்தி ஒரு சுவரில் மோதி கவிழ்ந்து விட்டது. இதனையடுத்து தேனீக்கள் அந்தப் பகுதி முழுவதும் பறந்து போக்குவரத்தை பாதித்துவிட்டது. .அந்த வழியாக சென்ற வாகனங்களை ஓட்டும் சாரதிகளையும் பயணிகளையும் தேனீக்கள் கொட்டி பாதிப்புக்குள்ளாக்கியதால் தீயணைப்புப் படையினர் அந்தத் தேனீக்களை கொன்று வருகிறார்கள்.

# எகிப்துக்கும் காஸாவுக்குமிடையே சுரங்கம் இடிந்து ஐவர் பலி

எகிப்துக்கும் காஸாப் பகுதிக்கும் இடையில் உள்ள எல்லைப் பகுதியில் சுரங்கம் ஒன்று இடிந்ததில் பல பலஸ்தீனர்கள் அதில் அகப்பட்டுக் கொண்டதாகக் கூறப்படுகின்றது.

5 பேர் இதில் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் வானொலி அறிவித்தது. ர.ஃபா பகுதியில் இந்தச் சம்பவம் நடந்த இடத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ள இஸ்ரேலிய படையினர், அங்கு அம்புலன்சுகளும் மீட்புப் பணியாளர்களும் செல்ல அனுமதித்தனர். ஆயுதங்களை மாத்திரமின்றி தடை செய்யப்பட்ட பொருட்களையும் ஆட்களையும் கடத்துவதற்காகவே இந்த சுரங்கங்கள் முன்னணிப் பகுதியில் தோண்டப்பட்டதாக செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

## சூறாவளியில் 6 பேர் பலி

பிரான்ஸின் தலைநகர் பரிசில் வீசிய ஹரிக்கேன் புயலில் 6 பேர் பலியாகியுள்ளனர். 10000 அதிகமான வீடுகளுக்கான மின்சார விநியோகம் துண்டிக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது..

ஒரு சில வினாடிகள் இந்த புயற்காற்று மணிக்கு 130 கிலோமீற்றர் என்ற வேகத்தில் வீசியதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

# நான்கு மாதங்களாக இடம்பெயர்ந்தோர் நிவாரணமில்லை இம்மக்கள் வெள்ள நிவாரணம் கோருவது நியாயமானதே

## -கிளி.மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

*இடம்பெயர்ந்த மக்களுக்கு அரசால் வழங்கப்பட வேண்டிய நிவாரணம் ஓகஸ்ட் மாதத்திற்குப் பிற்பாடு வழங்கப்படவில்லை. இன்று வெள்ளத்தால் பாதிக்கப்பெற்று அல்லலுறும் மக்கள் 4 மாதமாக நிவாரணமற்ற நிலையில் வெள்ள நிவாரணம் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளமையானது நியாயமானதே என கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம் தெரிவித்துள்ளார்.*

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மையில் பெய்த பலத்த மழை வெள்ளப்பெருக்கு என்பவற்றால் கிளிநொச்சி மாவட்டத்தில் 9238 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 1779 குடும்பங்கள் பாடசாலைகளிலும், பொது இடங்களிலும்தங்கியுள்ளன. இவர்களுக்கு சமைத்த உணவுகளை உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் குறிப்பாக தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கிவருகின்றது.

மிகுதியான 7ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள்



இடம்பெயர்ந்து தங்களுடைய உறவினர், நண்பர்கள் வீடுகளிலே வசிக்கின்றார்கள். இவர்களுக்கு எவ்வித நிவாரணமும் வழங்கப்படாத நிலையில் மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளார்கள்.

வெள்ளப்பாதிப்பிற்கு உள்ளான இம்மக்களுக்கு அரசால் வழங்கப்பட வேண்டிய நிவாரணம் கூட ஓகஸ்ட் மாதத்திற்குப் பிற்பாடு வழங்கப்படவில்லை. இம்மக்கள் தமக்கு வெள்ள நிவாரணம் வழங்குமாறு கோரியுள்ளார்கள். இடம்பெயர்ந்த இம்மக்களுக்கு 4மாதகாலமாக நிவாரணம் வழங்கப்படாத நிலையில் வெள்ள நிவாரணம் வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதானது நியாயமானது என்று கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

வட்டக்கச்சிக்கும், கிளிநொச்சி நகரத்திற்குமான போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு படகுச் சேவை நடாத்தப்பெறுகின்றது. வெலிக்கண்டல் பாலத்திற்கும், கண்டாவளைக்கும் இடையிலான பாதையிலும் படகுச்சேவை நடைபெறுகின்றது. இவ்வாறே அக்கராயன் பகுதிக்கும் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வரவேண்டிய கிளிநொச்சிக்கும் இடையிலான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளதால் அங்கும் படகுச்சேவை நடைபெறுகிறது. தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இப்படகுச் சேவையை கடற்றொழிலாளர்களின் ஆதரவுடன் நடாத்தி வருகின்றது.

அனேகமான குளங்கள் வான் பாய்கின்றதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. மற்றும் பூநகரிக்கான போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது. குடமுறுட்டி ஆறு, மண்டக்கல்லாறு போன்ற ஆறுகளும் பெருக்கெடுத்து ஓடுகின்றன.

பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவில் 2212 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. முக்கியமாக இந்த நீர் வழிந்தோட முடியாத அளவிற்கு இராணுவத்தால் அமைக்கப்பட்ட அணைகள், பதுங்குகுழிகள், காவலரண்கள் நீரை கடலுக்கு ஓடவிடாமல் தடுத்துள்ளன. காவலரண்கள் மண் அணைகளை வெட்டிவிடவும் முடியாதுள்ளது. அவற்றுள் மிதிவெடிகள் அபாயம் காணப்படுகின்றது. நீர் வெளியேறாததால் அங்கு பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

பல இடங்களில் மக்கள் பரல் வைத்துத்தான் சமைக்கின்றார்கள். வெளியே போகவும் விரும்பாத சில குடும்பங்கள் வெள்ளம் சூழ்ந்த குடிசைகளில் வாழ்ந்து வருகின்றன. ஏனென்றால் சென்ற வருடம் வெள்ளத்தால் இடம்பெயர்ந்து முகாமில் போய் இருந்து தொற்று நோய்களை வாங்கிக்கொண்டு சென்றதன் காரணத்தால் மக்கள் முகாம்களுக்குப் போகவும் பயப்படுகின்றார்கள். முகாமில் மலசலகூடமும், கிணறும் தண்ணீரும் ஒன்றாக மேவி வெள்ளம் பாய்கிறது.

இடம்பெயர்ந்த மக்கள் படுக்கை விரிப்புக்கள், பிளாஸ்ரிக் பாய்களை நிலத்தில் போட்டு இருக்கின்றார்கள். பெருமளவு வீடுகள் இடிந்து விழுந்து விட்டன. இம்மக்கள் கூரை விரிப்புக்கள், பிளாஸ்ரிக் பாய்கள், படுக்கை விரிப்புக்கள், குழந்தைகளுக்கான பால்மா என்பவற்றை தமக்கு வாங்கித் தருமாறு கோருகின்றார்கள். 8ஆயிரத் திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இவை தேவைப்படுகின்றன. இந்த உதவிகளை ஓரளவு வழங்கி உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் போன்ற நிறுவனங்கள் தான் பெரிதும் கவனித்து வருகின்றன என்றும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார். (சோ)

## -கிளி.விவேகானந்தா நகர்ப் பகுதியில்– கசிப்பு விற்பனை நிலையம் முற்றுகை பலர் கசிப்புடன் கைதாகினர்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரை அண்டிய பகுதியில் கசிப்பு விற்பனை செய்தவர்களையும் வாங்கியவர்களையும் தமிழீழ காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

இதுபற்றி காவல் துறையினர் அறியத் தருவதாவது; கிளிநொச்சி விவேகானந்த நகர்ப்பகுதியில் கசிப்பு விற்பனை நடைபெறுகின்றது என்ற தகவல் அறிந்தவுடன் அவ்விடத்திற்கு சென்ற காவல்துறையினர் கசிப்பு விற்பனை செய்தவரையும் பருகிக் கொண்டிருந்தவர்களையும் உடனடியாகக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இடத்தில் ஒரு போத்தல் கசிப்பும் அதனுடன் தொடர்புபட்ட வெற்று கலன்களையும் எடுத்துள்ளனர்.இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக நீதிமன்றத்தில் முற்படுத்தியுள்ளதாக கிளி. காவல் பணிமனைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (கு)

## வவுனியா அரச அதிபர் கணேஷ் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா அரச அதிபர் கணேஷ் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா அரசஅதிபராகக் கடமையாற்றிய க.கணேஷ் *01.01.2005* முதல் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா மாவட்ட அரச அதிபராக, மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபராக இருந்த சண்முகம் நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபராக இருந்த பத்மநாதன் உலக வங்கியின் செயற்றிட்டம் ஒன்றிற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார். *(10)*

## தமிழகத்திலிருந்து பதினொரு பேர் விமானம் மூலம் தாயகம் திரும்பல்

(மன்னார்)

தமிழ் நாட்டில் திருநெல்வேலி மாவட்டம் பெருமாள் அகதி முகாமில் வசித்த 8 குடும்பங்களைச் சேர்ந்த 11 பேர் திருச்சி விமான நிலையத்தில் இருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு வந்திறங்கினார்கள். இவர்களுக்கான இலவசப்பயண ஏற்பாடுகளை இந்தியாவில் இயங்கும் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் செய்து கொடுத்தது. கொழும்பு கட்டு நாயக்கா விமான நிலையத்திற்கு வந்திறங்கியதும் யு.என்.எச்.சி.ஆர் பெரியவர்களுக்கு 5000 ரூபாயும், சிறியவர்களுக்கு 2500 ரூபாயும் வழங்கி அவர்களைச் சொந்த இடங்களான வவுனியா சிதம்பரபுரம், செட்டிகுளம், மன்னார், சாவற்கட்டு, தலைமன்னார் போன்ற இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இவர்களில் 8 ஆண்களும், 3பெண்களும் அடங்குவர். *(18)*

## தமிழ் இளைஞன் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

தமிழ் இளைஞர் ஒருவர் கல்லடியில் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கடந்த புதன்கிழமை இரவு 9.00 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.அருந்தவராஜா தேவகுமாரன் என்ற இளைஞரே சுட்டுக் கொ்லலப்பட்டுள்ளவராவார்.

இது தொடர்பான விசாரணைகளைக் காத்தான் குடிப் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வெள்ளத்தால் நிர்க்கதியாகியுள்ள மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அவசர உதவி

(அலுவலகசெய்தியாளர்)

அண்மையிற் பெய்த கடும் மழை, வெள்ளப்பெருக்கு காரணமாக முல்லை மாவட்டத்தில் விசுவமடு பிரதேசத்தில் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் வீடு வாசல்களை இழந்து நிர்க்கதியாகியுள்ளன.

விசுவமடு பிரதேச செயலர் பிரிவில் மட்டும் 2ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும் தேவாலயங்களிலும், உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளன.

வள்ளிபுனம் பகுதியிலிருந்து 550 குடும்பங்களும் உடையார்கட்டு வடக்கில் இருந்து 356 குடும்பங்களும், உடையார்கட்டு தெற்கில் இருந்து 252 குடும்பங்களும், றெட்பானாவிலிருந்து 240 குடும்பங்களும், தேராவிலிருந்து 320குடும்பங்களும், விசுவமடுப் பகுதியிலிருந்து 575 குடும்பங்களும் வீடுகள் முற்றாகப் பாதிப்புற்ற நிலையில் இடம்பெயர்ந்துள்ளன.

வள்ளிபுனம் பொதுநோக்கு மண்டபத்தில் 251 குடும்பங்களும், தென்னிந்திய திருச்சபையில் 176 குடும்பங்களும், குரவில் பாடசாலையில் 56குடும்பங்களும், றெட்பானா விசுவமடு தேவாலயத்தில் 41 குடும்பங்களும், விசுவமடு மகாவித்தியாலயத்தில் 376 குடும்பங்களும் தங்கியுள்ளன.

குழந்தைகள், முதியவர்கள், கர்ப்பிணித்தாய்மார் எனப்பலர் தங்கியுள்ள இம் முகாம்களை முற்று முழுதாக தமிழர் புனர்வாழ்வுக்கழக நிதியுதவியுடன் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் பராமரித்து வருகின்றது.

மேற்படி 06 முகாம்களையும் நல்ல முறையில் பராமரிப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் தாம் எடுத்துள்ளதாகவும் தமது செயற்பாட்டுக்கு விசுவமடு பிரதேச அரசியல் துறையினரும் பேராதரவு நல்கி வருவதாகவும் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர் யூட் தெரிவித்தார். (சோ)

## இலவச பாடநூல்கள் ஒருதொகுதியே வந்தது

(வவுனியாசெய்தியாளர்)

வவுனியா தெற்கு வலய பாடசாலை மாணவர்களுக் கான ஒருதொகுதி இலவச பாடநூல்கள் வந்து சேர்ந்துள்ளன.

2005ஆம் ஆண்டில் பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்காக இவ்இலவச பாடநூல்கள் கல்வி அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. எனினும் பெருமளவான பாடநூல்கள் அனுப்பிவைக்கப்படவில்லை என அதிபர்கள் தெரிவித்துள்ளனர். *(10)*

# நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பிற்குள்ளான நோயாளர்களுக்கு சில ஆலோசனைகள்

## -பயன்தரு நூல் இன்று வெளியீடு

ஈழத்தில் கலை இலக்கியத்துறைக்கென சஞ்சிகைகளும், சிற்றிதழ்களும் வெளிவருதல் வளர்ச்சி பெற்றுக்கொண்டே செல்கின்றன. அவ்வாறே மருத்துவத்துறை சார்ந்த வெளியீடுகள் சஞ்சிகைகளாக, கட்டுரைத்தொகுதிகளாக, எழுத்துருக்களாக வெளிவருதல் ஆங்காங்கே குறிப்பிடக்கூடிய அளவிற்கு நடைபெற்று வருகின்றன.

இந்த வகையில் கிளிநொச்சி மருத்துவசங்க இதழ் வெளியீடான "நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பிற்குள்ளான நோயாளர்களுக்கு சில ஆலோசனைகள்" என்ற தலைப்பிலே டாக்டர் த.பேரானந்தராஜா, பொதுவைத்திய நிபுணர் அவர்களால் மிகவும் சிறந்த முறையிலே எல்லோருக்கும் எளிதாக விளங்கக்கூடிய வகையில் கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பது இதழின் சிறப்பினை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. சிறுநீரகம் தொடர்பான தொழிற்பாடு அதனைப் பாதுகாத்தல், சிறுநீரக அமைவிடம், நீரிழிவும் சிறுநீரக நோய்களும் போன்ற சிறு சிறு தலைப்பிலே வைத்தியர் இன்றியே விளங்கக்கூடிய வகையில் அழகுற எடுத்துக் கூறியுள்ளார்.

சிறுநீரகத்தின் தொழிற்பாடு குறைவடைவதைக் காட்டும் ஆரம்ப அறிகுறிகள் எவையென்பதை இலகுவாக விளக்கியுள்ளார். மேலும் சிறுநீரக செயலிழப்பு ஏற்பட்டவர்கள் பின்பற்ற வேண்டிய உணவு முறை, சிறுநீரக செயலிழப்பின்போது பயன்படுத்தப்படும் மருந்துவகைகள், நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பு மற்றும் இறுதிநிலை சிறுநீரக செயலிழப்பு ஏற்படும்போது செய்யக்கூடிய சிகிச்சை வழிகள் மற்றும் வீட்டில் செய்யக்கூடிய சலப் பரிசோதனை செய்யும் முறைகள் நோய் வராமல் தடுப்பதற்கு இலகுவாகச் செய்யக்கூடிய பயிற்சிகள் என்பவற்றை மிகவும் இலகு நடையிலே சிறுசிறு வினாக்களை வினாவும் முறையிலே விளக்கி எழுதி அனைவருக்கும் பயன்படக்கூடிய மகத்தான பணிபுரிந்துள்ளார்.

காலத்தின் தேவைகருதி இத்தகைய ஆக்கங்களை இனிவருங்காலங்களிலும் முன்னெடுத்துச் செயற்பட வேண்டும்.

மருத்துவ சங்கம் இத்தகைய வெளியீடுகளை விரிவுபடுத்தி முன்னெடுத்துச் சிறப்பிக்க வேண்டும். இவ்வாறான முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியன. எனப் பொதுவைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ச. ஜெயராசா தெரிவித்துள்ளார். (சோ)

# நாகர்கோவில் சிறிலங்காப் படை முகாம்களை பலப்படுத்த பெருமளவு பனை மரங்கள் தறிப்பு!

## -இரவு பகலாகப் படையினர் நடவடிக்கை

(தென்மராட்சி)

**நாகர்கோவில் சிறிலங்காப் படை முகாம்களைப் பலப்படுத்த எழுது மட்டுவாள் வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து இரவு பகலாய் நூற்றுக்கணக்கான பனை மரங்கள் படையினரால் தறிக்கப்படுகின்றன.**

நாகர் கோவில் சிறிலங்காப் படைகளின் முகாம்களை பலப்படுத்தும் முகமாக எழுதுமட்டுவாள் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள கொட்டர் தோட்டம் மற்றும் ஏனைய காணிகளில் இருந்து நூற்றுக்கணக்கான பனை மரங்கள் இரவு பகலாக படையினரால் தறிக்கப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

இவ்வாறு தறிக்கப்படும் பனை மரங்கள் இரவு பகலாக உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள பாதைகள் ஊடாக நாகர் கோவில் படைமுகாம்களுக்கு கொண்டு செல்லப்படுவதாக நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன. இரவு பகலாக மரங்கள் தறிக்கப்படும் சத்தங்களும் பனை மரங்கள் முறிந்து விழுவதையும் கனரக வாகனங்கள் மற்றும் உழவு இயந்திரங்கள் மூலம் மரங்கள் எடுத்துச் செல்லப்படும் சத்தங்களை இப்பகுதியில் உள்ள மக்களால் அவதானிக்கப்படுவதாகவும் தெரியவருகிறது. படைமுகாம்களுக்கு முன்னால் பதினைந்து அடிக்கு மேல் பனை ஓலைகளால் தொடர் அரண்போல் மறைப்பு கட்டப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (28)

(28)

## குளம் உடைப்பு தவிர்ப்பு!

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ளகாக்கை பணிக்கன் குளத்தின் அணைக்கட்டில் இரண்டு உமைகள் (ஊற்று) ஏற்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதி விவசாயிகளின் ஒத்துழைப்போடு அடைக்கப்பட்டது (05)

## பொலிசாரின் பேராதரவுடன் சட்டவிரோத கசிப்பு விற்பனை

(தென்மராட்சி)

சரசாலை தெய்வங்கேணிச் சந்திப்பகுதியில் பிரபல சாராய வியாபாரி ஒருவர் சிறிலங்காப் பொலிசாரின் துணையுடன் கள்ளச்சாராயம் மற்றும் கசிப்புக்காய்ச்சி அமோக விற்பனையில் ஈடுபட்டு வருவதாக மக்கள் பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளனர்.

கடந்த மாதம் பொதுமக்கள் கொடுத்த அழுத்தத்தின் பயனாக சிறிலங்காப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட இவர் சில மணித்தியாலத்திற்குள்ளேயே இராஜ மரியாதையுடன் பிடிக்கப்பட்ட இடத்திலேயே ஜீப்பில் கொண்டு வந்து இறக்கப்பட்டார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்பொழுது கனகம் புளியடிச் சந்தியில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தின் ஆதரவுடன் இவர் இச் சட்ட விரோத சாராய விற்பனையில் ஈடுபட்டுவருவதாகத் தெரிய வருகிறது. (28)

## -நீதிமன்ற வளாகத்திலிருந்து-

## தப்பிச்சென்ற கைதிகளுக்கு கடூழிய சிறைத்தண்டனை

(வடமராட்சி)

விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டிருந்த வேளை பருத்தித்துறை நீதி மன்ற வளாகத்திலிருந்து தப்பித்துச் சென்ற கைதிகள் இருவருக்கு முறையே ஐந்து மற்றும் மூன்று வருட கடுழிய சிறைத்தண்டனையினை விதித்து யாழ்.மேலதிக நீதிமன்று தீர்ப்பளித்துள்ளது.

கடந்த மாதம் 16 ஆம் திகதியன்று இடம்பெற்ற விசாரணையொன்றிற்கென அழைத்துச் செல்லப்பட்டிருந்த வேளையில் துன்னாலையைச் சேர்ந்த சீக்கியன் என அழைக்கப்படும் யோகராசா போகேஸ்வரன் மற்றும் பழனி சுமன் ஆகிய இரு கைதிகளும் தப்பித்து ஓடியிருந்தனர்.

வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடனும் தொடர்புபட்டிருந்ததாக குற்றஞ்சாட்டியே முன்னர் இவர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற பணிப்பின் பிரகாரம் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். எனினும் தப்பித்த இரு கைதிகளும் மீண்டும் பொலிசாரால் பிடிக்கப்பட்டு யாழ். சிறைச்சாலையில் ஒப்படைக்கப் பட்டிருந்தனர்.

இந்நிலையில் கடந்த புதன் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் யாழ்.சிறைச்சாலைக்குச் சென்ற மேலதிக நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தலைமையிலான விசாரணைக்குழு குறித்த இரு சந்தேக நபர்களையும் விசாரணைக்குட்படுத்தியிருந்தது.

விசாரணையின் முடிவில் இருவருக்கும் முறையே ஐந்து மற்றும்மூன்று வருடகடூழியசிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்த மேலதிக நீதவான் சந்தேகநபர்களை பருத்தித்துறை நீதிமன்றில் இடம்பெறும் விசாரணைகளில் தொடர்ந்துஆஜர்செய்யவும் உத்தரவிட்டுள்ளார். (27)

## இராணுவ ஆக்கிரமிப்பு பகுதிகளுக்குள் தங்கியுள்ள கால்நடைகளால் பயிரழிவு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுழிபுரம், தெல்லிப்பழை, மூளாய், இளவாலை போன்ற பகுதிகளில் உள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களுள் தஞ்சம் புகுந்து வாழும் கட்டாக்காலி கால்நடைகள் அடிக்கடி இப்பாதுகாப்பு வலயங்களை அண்டியுள்ள விளைநிலங்களுள் புகுந்து பயிர்களை நாசம் செய்து வருகின்றன.

இராணுவ அதியுயர் பாது காப்பு வலயங்களுள் வாழ்ந்து வரும் பெரும் எண்ணிக்கையான கட்டாக்காலி மாடுகள் கூட்டம் கூட்டமாக அப்பகுதி விவசாய நிலங்களுள் புகுந்து பயிர்களை நாசம் செய்கின்றன.

எனினும் இவை அனைத்தும் இராணுவ அதி யுயர் பாதுகாப்பு வலயங்களுள்ளேயே தஞ்சம் புகுந்து வாழ்வதால் அவற்றை கட்டுப்படுத்த முடியாத நிலை உள்ளது. இதனால் இப்பகுதி விவசாயிகள் பெரும் இழப்புக்களை எதிர் நோக்கிக் கொண்டு வருகின்றனர். (33)

## மீளக்குடியமர்ந்த 7072 குடும்பங்களை மீள்குடியமர்வுக் கொடுப்பனவு எட்டவில்லை

### -நிதி ஒதுக்கீடும் இல்லையெனத் தகவல்

(வடமராட்சி)

அரசு- புலிகளுக்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் ஒக்ரோபர் வரையான காலப்பகுதியினில் 27ஆயிரத்து 605 குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டு இருப்பதாக யாழ்.செயலக புனர் வாழ்வுப் பகுதி திட்டப் பணிப்பா ளர் பூ.சுந்தரம்பிள்ளை அறிவித்து ள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் செப்ரெம்பர் மாத இறுதி வரையான காலப்பகுதி வரை சுமார் 50 ஆயிரத்து 177 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 85 ஆயிரத்து 506 பேர் யாழ்குடா நாட்டில் மீளக்குடியமர்ந்துள்ளனர். அவர்களில் மீள்குடியமர்வுக் கொடுப்பனவான 25ஆயிரம் ரூபா, 27ஆயிரத்து 605 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு விட்டது.

இதேவேளை இக்கொடுப்பனவுகள் மேலும் 7ஆயிரத்து 72 குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டி இருப்பதாகவும் இதற்கெனச் சுமார் 174 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு தேவையெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே யுத்த நடவடிக்கைகளினால் உயிரிழப்பு, அங்கவீனம் மற்றும் படுகாயமடைந்த பொதுமக்களது சுமார் 1987 விண்ணப்பங்கள் இதுவரை யாழ்செயலக புனர்வாழ்வுப் பகுதியில் கையளிக்கப்பட்டுள்ளன. கடும் . பாதிப்புற்றோருக்கான கொடுப்பனவு நடைமுறையின் கீழ் இவர்களுக்கான உதவு தொகையினை வழங்கச் சுமார் 140 மில்லியன் ரூபாநிதி தேவை யென மதிப்பிடப்பட்டுள்ளது.


எனினும் அரசு இவ் வருடத்திற்கு 17 மில்லியன் ரூபாவை மட்டுமே ஒதுக்கியுள்ள நிலையில் 267 இறப்பு மற்றும் 87 அங்கவீனத்திற்கு உதவு தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய விண்ணப் பங்களிற்கான கொடுப்பனவுகளை வழங்க மேலும் 123 மில்லியன் தேவைப்படுவதாகக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (27)

## வீதிப் போக்குவரத்து தொடர்பாக கருத்தரங்குகள்

(அலுவலக செய்தியாளர்)

வீதிப் போக்குவரத்துத் தொடர்பான கருத்தரங்குகள் நேற்று முன்தினம் மூன்று நிறுவனங்களில் நடைபெற்றுள்ளது.

தமிழீழ காவல்துறையினரின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் இக் கருத்தரங்குகள் புலிகளின்குரல் நடுவப்பணியகத்திலும், கரைச்சி தெற்கு ப.நோ.கூ சங்கப் பணிமனையிலும்,அறிவியல் நகர் தொழில்நுட்பக் கல்லூரியிலும் நடைபெற்றுள்ளது.



முதல் கருத்தரங்கு புலிகளின் குரல் நடுவப்பணியகத்தில் அதன் துணைப் பொறுப்பாளர் செயல்வீரன் தலைமையில் காலை 9.00 மணிதொடக்கம் 11.00மணிவரை நடைபெற்றது. இதில் வீதிப் போக்குவரத்துப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன், துணைப்பொறுப்பாளர் ஜீவானந் ஆகியோர் கருத்துக்களை வழங்கியுள்ளனர்.

இக் கருத்தரங்கில் அந் நிறுவனத்தில் பணியிபுரியும் 25 ஊழியர்கள் பயனடைந்துள்ளனர்.

அடுத்து கரைச்சி தெற்கு ப.நோ. கூ.சங்க பணிமனையில் நடைபெற்ற கருத்தரங்கு சங்கத் தலைவர் வை.குகராசா தலைமையில் காலை 11.30 மணி தொடக்கம் 2.00 மணிவரை நடைபெற்றது.இங்கு 65 இற்கு மேற்பட்ட ஊழியர்கள் பயனடைந்ததுடன், வீதிப் போக்குவரத்துத் தொடர்பான தமது சந்தேகங்களைக் கேட்டறிந்து கொண்டுள்ளனர்.

இங்கு சி.சிவகுமாரன், மற்றும் வீதிப் போக்குவரத்து பிரிவைச் சேர்ந்த சிறிதரன் ஆகியோர் கருத்துக்களை வழங்கினர்.

அடுத்து அறிவியல் நகர் தொழில்நுட்பக்கல்லூரியில் கருத்தரங்கு அதன் பணிப்பாளர் போகன் தலைமையில் மாலை 3.00 மணி தொடக்கம் 4.00 மணிவரை நடைபெற்றுள்ளது.

இதில் அங்கு கல்வி பயிலும் 90 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இக் கருத்தரங்கில் சி.சிவகுமாரன், வீதிப்போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த ஜெயந்திரன் ஆகியோர் கருத்துக்களை வழங்கியுள்ளனர்.

அத்துடன் தொடர்ந்து கிளிநொச்சிப் பகுதியில் இவ்வாறான வீதிப் போக்குவரத்துத் தொடர்பான கருத்தரங்குகளை வழங்கிவருவதன் ஊடாக வீதி விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்வதுடன் வீதி நடைமுறைகளைப் புரிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது எனக் கருத்தரங்கில் பயனடைந்தோர் தெரிவித்துள்ளனர். (கு)

## -கல்வி நிர்வாக சேவை பரீட்சைக்கமைய-

## பதவியுயர்வுகளை வழங்க சிறிலங்கா சனாதிபதி இணக்கம்

(திருமலை)

ஏற்கனவே நடத்தப்பட்டு பின்னர் சட்டமா அதிபரினால் ரத்துச் செய்யப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவையின் வடக்குக் கிழக்கு மாகாணத்துக்கான தமிழ் மொழி மூலப் பரீட்சை தேசிய மட்டத்திலான பரீட்சை ஆகிய வற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் பதவி உயர்வுகளை வழங்கும்படிபது சனாதிபதி உத்தரவிட்டுள்ளார் கல்விசார் தொழிற் சங்கங்கள் வியாழக்கிழமை மாலை சனாதிபதி செயலகத்தில் சனாதிபதியைச் சந்தித்து தங்களின் கோரிக்கைகளை முன் வைத்துப் பேச்சுவார்த்தை நடத்தின. அப்போதே சனாதிபதி இவ்வுத்தரவைப் பிறப்பித்ததாக சந்திப்பில் பங்குபற்றிய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார். மாலை 4 மணியளவில் ஆரம்பமான இச்சந்திப்பு மாலை 6 மணிவரை நீடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது இலங்கைக் கல்வி நிர்வாக சேவைக்கு நடத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் டிசம்பர் 28,29ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சை நடத்தப்படும் என்றும் சேவை மூப்பும், திறமையின் அடிப்படையிலான போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலான நேர்முகப் பரீட்சை சனவரி 8,9ஆம் திகதிகளில் நடத்தப்படும் என்றும் சந்திப்பின் போது அறிவிக்கப்பட்டது. சந்திப்பின்போது சனாதிபதியுடன் கல்வி அமைச்சின் செயலாளர் தாராடி மெல்லும் சமுகமளித்திருந்தார். (25)

# சங்கராச்சாரியார் விவகாரத்தில் தடுமாறும் தமிழக அரசு

அ.கலைவாணி

அரசியலில் அதிரடி நடவடிக்கைகள் மூலம் பலவிதமான விமர்சனங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பவர் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா! அந்த வகையில் காஞ்சி சங்கராச்சாரியாரைக் கைது செய்து அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தத்தான் முனைந்தார். ஆனால் அரசியலில் நினைப்பதெல்லாம் நடப்பதில்லை. அதற்கு எதிர்மாறாகவும் நடந்து விடும் என்பது போலவேதான் சங்கராச்சாரியாரின் கைது தமிழக அரசைத் திண்டாட்டத்திற்குள் தள்ளிவிட்டது எனலாம்.


ஜெயலலிதா

அந்தவகையில் சங்கராச்சாரியாரின் கைது விவகாரம் பலவித சர்ச்சைகளையும், சந்தேகங்களையும் கூட புதிது புதிதாக உருவாக்கி வருகின்றது. அதனால் சங்கராச்சாரியாரின் கைது ஏன்.....? தனிப்பட்டவிரோத நடவடிக்கையா...? அல்லது பரபரப்பை ஏற்படுத்தும் திட்ட அரங்கேற்றமா...? எனும் பல வினாக்களுக்கு தமிழக அரசு பதிலளிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றது.


சட்டம் தனது கடமையினைச் செய்திருக்கின்றது: சட்டத்தின் முன் அனைவரும் சமம் எனும் சட்டவாக்கியங்களைத்தான் தமிழக அரசு சங்கராச்சாரியாரின் கைதுக்குக் காரணமாகக் கூறியிருந்தது. ஆனால் இன்றோ கைது விவகாரம் பல கேள்விகளுக்குப் பதில் தேட வேண்டியதொன்றாகியுள்ளது.

அத்துடன் சங்கராச்சாரியார் சென்னை நீதிமன்றம் மூலம் பிணையில் வெளியே வர முனைந்தார். ஆனால் தமிழக பொலிஸ் இடையே புகுந்து தடுத்துவிட்டது. உயர் நீதிமன்றத்தைச் சங்கராச்சாரியார் நாடினார். குற்றவாளியை வெளியே விடுவது தடயங்களை அழிப்பதற்குச் சமன். சங்கராச்சாரியார் குற்றவாளி என்பதற்கு முழு ஆதாரமும் தமது கைவசமிருப்பதாக மீண்டும் தமிழகப் பொலிஸ் குறுக்கே புகுந்து தடுத்துவிட்டது.

ஆனால் இன்றைய நிலையில் சங்கராச்சாரியாரைக் குற்றவாளியாக்க, தமிழக அரசு ஆதாரங்களை இப்போது[illegible] தேட ஆரம்பித்திருக்கின்றது என்றே நம்பப்படுகின்றது அதற்குத் தகுந்தால் போலவேதான் தமிழகப் பொலிசாரும் செயற்படுகின்றனர் என்று நம்பிக்கையின் ஒரு பக்கமாகக் கொள்ளப்படுகின்றது.

ஏனெனில் காஞ்சி வரதராஜப் பொருமாள் ஆலய அதிகாரி சங்கரராமன் கொலை செய்யப்பட்டது. சங்கராச்சாரியாரால் தான் என்பது போன்றுதான் அதிரடியாக நேபாளம் செல்லவிருந்த சங்கராச்சாரியார் சடுதியாகத் தமிழகப் பொலிசாரால் சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டார்.

அது மட்டுமன்றி சங்கரராமன் கொலைக்குக் காரணம் என்றோ அல்லது உடந்தை என்றோ சந்தேகத்தின் பேரில் சங்கராச்சாரியார் தவிர 20 பேர் கூட கைது செய்யப்பட்டுள்ளனர்.


சங்கராச்சாரியாரை சிறையில் சந்தித்த பா.ஜ.க. எம்.பிக்கள்

ஆனால் இன்றோ சங்கரராமன் கொலைக்குப் பின்னால் அப்பு, ரவி, சுப்பிரமணியம் எனும் பிரபல தாதாக்கள் இருப்பதாக தமிழக அரசு சாட்சியம் கூறுகின்றது.

அத்துடன் மூவரில் ஒருவரையாவது பிடித்துக் கொடுத்தால் ஒரு இலட்சம் பரிசு வழங்கப்படும் என்றும் தமிழகப் பொலிசார் அறிவிப்புச் செய்துள்ளனர். இவர்கள் மூவரும் இந்தியாவிலிருந்து வேறு நாடுகளுக்குத் தப்பிச் சென்று விட்டதாகவும் தமிழகப் பொ[illegible]சார் ஆருடம் கூறுகின்றனர்.

இதில் விந்தை என்னவென்றால் சங்கராச்சாரியார் தான் சங்கரராமன் கொலைக்குப் பின்னால் இருந்தார் என்பதற்கோ அல்லது சங்கரராமன் கொலைக்கும் அவருக்கும் தொடர்பு இருக்கின்றது என்பதற்கோ தமிழக அரசிடம் எதுவித ஆதாரமும் இல்லைப் போன்று தான் தற்போதைய நிலைமைகள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

இல்லையேல் அப்பு,ரவி, சுப்பிரமணியம் எனும் நபர்களை தமிழக அரசு தேடக் காரணம் தான் என்ன...? உண்மையில் சங்கரராமன் கொலையில் சங்கராச்சாரியார் வாலா...? தும்பா...? என்பதை ஏன் தமிழகப் பொலிசார் இதுவரை நிரூபிக்க முன்வரவில்லை...?

அது மட்டுமன்றி தமிழகப் பொலிசார் அப்பு, ரவி, சுப்பிரமணியம் எனும் நபர்களைக் கூட பிடிக்க முடியாத நிலையில் தான் இருப்பதை தமிழக அரசு மறைமுகமாக ஒத்துக் கொண்டிருப்பதையும் காணமுடியும். இல்லையேல் அவர்களைப் பிடித்துத் தருமாறு பொது மக்களிடம் பரிசுத் தொகையை போர்வையாக்கி மண்டியிடும் நிலை உருவாகியிருக்காது.

எனவே தமிழகப் பொலிசாரின் பரிதாபத்திற்கிணங்கி பொது மக்கள் யாராவது அந்தத் தாதாக்களைப் பிடித்துக் கொடுத்தால் மட்டும்தான் தமிழக அரசு சங்கராச்சாரியார் விடயத்தில் மேலே ஒரு படி நகரும் போலவே நிலைமைகள் உள்ளன.



எனவே தாதாக்கள் பிடிபடாத வரை, சங்கராச்சாரியாரின் நிலை என்ன..? போன்ற சர்ச்சைக்குரிய விவாதங்களும் தற்போது தமிழகத்தை மட்டுமன்றி இந்தியாவையே ஆட்டிக்கொண்டிருக்கின்றது என்பதில் துளியும் சந்தேகமில்லை.

இதேவேளை சங்கராச்சாரியாரின் கைது எதனால்...? எனும் வினாவுக்கு நாளுக்கு நாள் புதிய புதிய விடைகள் பரபரப்பையும் ஏற்படுத்தப் பின் நிற்கவில்லை.


சங்கரராமன்

அந்தவகையில் தற்போது கிசுகிசுக்கப்படும் விடயம் இரண்டு தான்.

*தமிழக முதலமைச்சருடன் அட்டையாக ஒட்டித்திரியும் தோழி சசிகலாவைப் பிரிப்பதற்காக, சங்கராச்சாரியார் யாகம் நடத்தியுள்ளாராம். அதனால் என்னிடமிருந்து எனது தோழியைப்பிரிக்க சங்கராச்சாரியார் யார்? எனும் தமிழக முதலமைச்சரின் கோபமும் அதன் வெளிப்பாடுமே கைது என்று தமிழக நாளிதழ் பரபரப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

*நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் பாரதிய ஜனதா தமிழகத்தை அ.தி.மு.கவுடன் வலிந்து சென்று கூட்டணி அமைத்துக் கொண்ட போதும் ஒரு தொகுதியைக் கூட தக்க வைக்க முடியவில்லை. இதனைச் சங்கராச்சாரியார் விமர்சனம் செய்திருந்தார். "தமிழகத்தில் பாரதிய ஜனதா தோல்வியுற தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் அகங்காரமே காரணம்" அதற்காகவே கைது என்று சங்கராச்சாரியாரின் பக்கத்தவர் கூறுகின்றனர்.

ஆனால் சங்கராச்சாரியாரை இன்று சிறைக்குள்த்தள்ளியுள்ள தமிழக முதலமைச்சர்தான், முன்பு ஒருகாலத்தில் சங்கராச்சாரியாரின் பாதத்தைத் தொட்டு வணங்கு வதில் முன்னின்றவர். அவருடைய வாக்கு வேதவாக்கு என்றும் செயற்பட்டவர் என்றும் கூற முடியும்.

ஏனெனில் காஞ்சி சங்கராச்சாரியாரின் வேண்டு கோளிற்கிணங்கவே தமிழக முதலமைச்சர் மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டுவந்ததாக இப்போதும் உறுதியாக நம்பப்படுகின்றது.

எனவே ஆன்மீகவாதியுடன் ஒட்டித்திரிந்த தமிழக முதலமைச்சர் இன்று வெட்டிக்கொள்ளக் காரணம் தனிப்பட்ட விரோதமே எனும் சந்தேகம்தான் வலுக்க ஆரம்பித்திருக்கிறது.

ஆனால் சங்கராச்சாரியார் ஓர் ஆன்மீக வாதி. ஆன்மீக வாதிக்கு எதற்கு அரசியல். சித்தன் போக்கு சிவன் போக்கு என்று தனது வழியில் நடக்க வேண்டியவர் ஏன் கடந்த மக்களவைத் தேர்தற் காலத்தில் சென்னையில் பாரதிய ஜனதாவின் தேர்தல் அலுவலகத்தைத் திறந்து வைப்பதற்கு வந்தார்.......? பாரதிய ஜனதாவின்தோல்வி குறித்து ஏன் விமர்சிக்க முனைந்தார். அப்படி எனின் சங்கராச்சாரியார் ஆன்மீக வாதியா...?அல்லது பாரதியஜனதாக் கட்சிக்குச் சார்பான காவிகட்டிய அரசியல் நிலைப்பாடு கொண்டவரா....? என்றே இன்று பலவித விமர்சனங்கள் சங்கராச்சாரியாரின் கைதினையடுத்து எழுந்திருக்கின்றது.

இதேவேளை சங்கராச்சாரியாரின் வழக்கை வேறு மாநிலத்திற்கு மாற்றவேண்டும் என்று பாரதிய ஜனதாக்கட்சி ஒற்றைக் காலில் நிற்கின்றது. ஏனெனில், தமிழக அரசு காழ்ப்புணர்ச்சியுடன் நடந்து கொண் டுள்ளது; திட்டமிட்ட பழிவாங்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது; தமிழக அரசில் நம்பிக்கையில்லை; தமிழகத்தில் நேர்மையான விசாரணைகள் நடைபெறாது என்ற காரணகாரியத்தையும் அக்கட்சி கூறுகின் றது.

அது மட்டுமன்றி அக்கட்சியைச் சேர்ந்தவர்கள் சிறைக்குள்ச் சென்று சங்கராச்சாரியாரை நலம் விசாரித்தும், அவரை வெளியில் கொண்டுவரும் நடவடிக்கையிலும் மும்முரம் காட்டுகின்றனர்.

இதன் மூலம் வெளிப்படுவது என்ன......? பாரதிய ஜனதாவுக்கும், அ.தி.மு.கவுக்கும் இடையே இடைவெளி அதிகரித்து விட்டது என்பது மட்டுமல்ல. கடந்த மக்களவையில் ஒட்டிக் கொண்டவர்கள் இப்போது இருமுனைத் துருவங்களாக மாறிவிட்டார்கள் என்பதையும் கண்டுகொள்ளமுடியும்.

எனவே தமிழக அரசுக்கு எதிரானதும், எதிர்க்கட்சியுமான தி.மு.க.கூட்டணி போன்றேதான் தமிழகப் பாரதிய ஜனதாவும் செயற்படக்கூடும் என்றும் எதிர்பார்ப்பு நிலவ ஆரம்பித்திருக்கின்றது.

இவற்றை எல்லாம் ஈடுகட்டுவதானால் தமிழக அரசு சங்கராச்சாரியார் ஏன்..... எதற்கு......? கைது செய்யப்பட்டார் என்பதை மக்கள் முன் கொண்டு வர வேண்டும். இல்லையேல் அது தழிழக அரசை இக்கட்டான நிலைக்கு மேலும் தள்ளக்கூடும்.

அது மட்டுமன்றி 2006 சட்டமன்றத் தேர்தலை முன் வைத்து அதிரடிகளைத் தளர்த்தி வரும் தமிழக அரசு சங்கராச்சாரியாரை கைது செய்ததன் மூலம் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதாக மக்களைக் கவரவே இதுவும் ஒரு நடவடிக்கை என்று விமர்சிக்கத் தோன்றுகிறது.

இல்லையேல் அயோத்தியில் இராமர் கோயில் கட்டாமல் வேறு எங்கே கட்டுவது...... ? என்று வினா எழுப்பி ஓர் இந்துத்துவக் கொள்கை உடையவர் போன்று பேசிய தமிழக முதலமைச்சர் இன்று சங்கராச்சாரியாரைக் கைது செய்ததன் மூலம் எதனை வெளிப்படுத்த முனைந்துள்ளார்.....?

எது எப்படியோ சங்கராச்சாரியாரின் கைது உண்மையில் கொலையுடன் தொடர்புடையதா.....? அல்லது தமிழக முதலமைச்சரின் தனிப்பட்ட விரோத நடவடிக்கையா.....? அல்லது பாரதிய ஜனதாவுடனான கூட்டணியை முறித்துக் கொள்வதற்கான அறிகுறியா......? போன்ற வினாக்களுக்கு தமிழக அரசு பதில் சொல்லாத வரை, சங்கராச்சாரியாரின் கைது மர்மம் நிறைந்ததொன்றாகவே காட்சியளிக்கும் என்றால் மிகையில்லை!

# சனாதிபதி சந்திரிகாவிற்கு உதவுவோர் விடுத்த எச்சரிக்கை

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பில் சனாதிபதி சந்திரிகாவிற்குச் சற்று அழுத்தம் கொடுக்கும் வகையில் சிறிலங்காவிற்கு உதவிவழங்குவோர்,குறிப்பாக டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் கூட்டுத் தலைமை வகித்த நாடுகள் அறிவுறுத்தல் ஒன்றை விடுத்துள்ளன.

வழமையாக தூதரக அறிக்கைகள் போன்றில்லாது சனாதிபதியை நேரடியாகச் சந்தித்த டோக்கியோ மாநாட்டிற்குத் தலைமை வகித்த நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள், சமாதான முயற்சிகள் தொடர்பாக சனாதிபதி சந்திரிகா அரசு தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் எனக் கோரிக்கையை முன்வைத்துள்ளன.

இவர்கள் "நோர்வேயின் அனுசரணைப் பணி மற்றும் சமாதான முயற்சிகள் தொடர்பில் சிறிலங்கா அரசின் தீர்க்கமான நிலைப்பாட்டை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உடனடியாகத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியம்" எனச் சனாதிபதி சந்திரிகாவை நேரிடையாகவே கேட்டுக் கொண்டுள்ளனர்.

அடுத்ததாக "சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகவும், நோர்வேயின் அனுசரணைப்பணி தொடர்பாகவும் சிறிலங்கா அரசின் பங்காளிக்கட்சியான ஜே.வி.பி தெரிவித்துவரும் கருத்துக்கள் குறித்தும் உரையானது, விடுதலைப் புலிகள் பொறுமையின் எல்லைக்கு வந்துவிட்டனர் என்பதைத் தெளிவாகவே கோடிட்டுக் காட்டியது. அத்தோடு சமாதானப் பேச்சு வார்த்தைகளை முன்னெடுப்பதற்கு சனாதிபதி சந்திரிகாவினால் முடியாதுள்ளது என்பதையும், ஜே.வி.பி இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண அனுமதிக்கப் போவதில்லை என்பதையும் தெளிவாகவே வெளிப்படுத்தியது.

தேசியத் தலைவரின் மாவீரர் தின உரை குறித்து வழமைக்கு மாறாக இம்முறை மேற்கு உலகம் அமைதி காத்தது. அதாவது தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் உரையினை விமர்சனம் செய்யவோ அன்றி கண்டிக்கவோ முன்வரவில்லை. ஏனெனில் தேசியத்தலைவரின் உரையானது யதார்த்த பூர்வமானதாக இருந்தது. இதன் காரணமாக மேற்குலக இராஜதந்திரிகளினாலும் அது அங்கீகரிக்கப்பட்டதாக இருந்தது.

ஏனெனில் இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் சந்திரிகா அரசின் நிலைப்பாடானது இரண்டு முக்கிய விடயங்கள் குறித்து கேள்வியை எழுப்புவதாய் அமைந்தமை அனைவராலும் உணரப்பட்டதாகவே இருந்தது.

இருக்கலாம். ஆளும் கூட்டணிக்குள் இவ்விவகாரத்தில் ஒருமித்த ரீதியில் காணப்படும் கருத்தானது ஆட்சியாளருக்கு மேற்குலகத்தை இரண்டாம் பட்சமானதாக்கியுள்ளது என்பது வெளிப்படையானது.

குறிப்பாக சமாதான முயற்சி களில் மேற்குலகம் காட்டிய வழிகாட்டு தலினுள் சிறிலங்கா அரசு நடந்துகொள்ளத் தயாராக இல்லை என்பது அவர்களினால் புரியப்பட்டதாக உள்ளது. அதாவது சமாதான ஏற்பாட்டாளரான நோர்வே அரசைத் தொடர்ந்தும் ஜே.வி.பியும், சந்திரிகா குமாரதுங்கவும் அவமதித்து வருவது நோர்வேக்கு வெறுப்பேற்றி யிருக்க கூடியதே.

அதிலும் தொடர்ச்சியாக நோர்வேயின் தேசியக்கொடியினை எரிப்பது, நோர்வே அரசிற்கு எதிரான ஊர்வலங்களை நடாத்துவது போன்றவை வழமையானதாக இருந்தது மட்டுமல்ல, சமாதானப் பேச்சு வார்த்தை தொடர்பாக சனாதிபதியுடன் சந்திப்புக்களை மேற்கொள்ள நோர்வே மேற்கொள்ளும் முயற்சியைத் தட்டிக்கழிப்பது தாமதப் படுத்துவது போன்றவையும் நோர்வே அரசிற்கும், மேற்குலகத்தவருக்குச் சலிப்பும், எரிச்சலையும் கொடுத்திருக்கக்கூடும். அதிலும் குறிப்பாக இறுதியாகக் ஒருவகையில் மேற்குலகத்தவருக்கு ஏமாற்றமளிக்கும் ஒன்றாகவே இருந்தது.

இவற்றிற்கு அடுத்ததாக மேற்குலகத்தின் நட்புச் சக்தியான ரணில் விக்கிரமசிங்கவை அரசியல் ரீதியில் ஒடுக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் சனநாயக மரபுகளுக்கும், பண்புகளுக்கும் மீறியவையாக உள்ளதென மேற்குலகம் கருதியிருந்ததும்கூடும். குறிப்பாக, ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் கலைக்கப்பட்டமை சனநாயக விரோதச் செயலாக அவர்களால் கவனத்திற்கொள்ளப்பட்டிருத்தல் கூடும்.

மேலும் எஸ்.பி.திஸாநாயக்கவை வஞ்சம் தீர்த்துக்கொள்வது போன்று சனாதிபதி சந்திரிகா நடந்துகொண்டமையானது மேற்குலக அரசுகளினால் ஏற்றுக்கொள்ளத்தக்கதொன்றாகவும் இருக்க வாய்ப்பில்லை.. ஏனெனில் ஆட்சியாளர்கள் தமது அதிகாரத்தை ஒடுக்கு முறைக்குப்



சனாதிபதி சந்திரிகாவிடம் தமது கடும் அதிருப்தியை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

சிறிலங்காவிற்கு உதவி வழங்குபவர்கள் இத்தகையதொரு நிலைப்பாட்டை வெளிப்படையாக மேற்கொண்டமையானது அரசியல் இராஜதந்திர வட்டாரங்களில் குறிப்பிடத்தக்க உணர்வலைகளை வெளிப்படுத்தியுள்ளது என்பது மிகையானதல்ல. அதிலும் குறிப்பாக தமிழீழ தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரையில், அவர் வெளிப்படுத்திய சில உணர்வுகளை ஒத்ததாக இந்நாடுகளும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளமை விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு தொடர்பான நியாயப்பாட்டினை வலியுறுத்துவது போன்றதாகியுள்ளது.

ஆனால், இந்நாடுகள் இத்தகைய தொரு நிலைப்பாட்டிற்கு-அதாவது சிறிலங்கா அரசாங்கத்திற்கு வெளிப்படையாக அழுத்தத்தைக் கொடுக்கும் வகையில் தற்பொழுது ஓர் நிலைப்பாட்டை மேற்கொள்ள முன்வந்தமைக்கான காரணிகள் என்ன? அதாவது சமாதானம் முயற்சிகள் தோல்வியுறும் கட்டத்தை அடைந்து விடும் தறுவாயை எட்டியுள்ளன. ஆகையினால் அரசாங்கம் சமாதான முயற்சிகள் முன்னேறும்வகையில் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற நோக்கிலா? அதாவது சமாதான முயற்சிகளைப் பாதுகாக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையா?

அன்றி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்தின் அரசியல் பொருளாதார மற்றும் வெளியுறவுக்கொள்கை தொடர்பான நிலைப்பாடு காரணமாக அதன் மீதான சில அழுத்தங்களைப் பிரயோகிப்பது அவசியமாகியுள்ளது என்ற நியாயப் பாட்டின் அடிப்படையிலானதா? என்பது முக்கியமாக ஆராயப்பட வேண்டியதாகியுள்ளது.

தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் மாவீரர்தின

1.சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஜே.வி.பி எவ்வேளையிலும் அனுமதிக்கப் போவதில்லை.

2.நோர்வேயின் அனுசரணையாளர் பாத்திரம் கேள்விக்குள்ளாகியுள்ளது மட்டுமல்ல, நோர்வே அரசைச் சிறுமைப் படுத்தும் வகையிலும் அரசாங்கத்தின் செயல்கள் இருந்தன. குறிப்பாக சுட்டிக் காட்டுவதானால் ஜே.வி.பி.யின் செயல்கள் இருந்தன.

மறுபுறத்தில் சிறிலங்கா அரசானது தனது இராணுவப் பலத்தை விரிவாக்கம் செய்வதில் மிகவும் குறியாக இருந்தது. இராணுவத்தை நவீனப்படுத்தியதோடு பாதுகாப்புச் செலவீனத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து இராணுவத்தை எவ்வேளையிலும் தயார் நிலையில் வைத்துக் கொண்டும் இருந்தது.

இந்நிலையில் தேசியத் தலைவரினால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு சுமார் இரண்டு வாரங்கள்கடந்துவிட்ட நிலையிலும் அரசாங்கம் உத்தியோகபூர்வமான பதில் எதையும் அளிக்காத நிலையில் நாடு யுத்தத்தை நோக்கிச் செல்வதை உணர்ந்த இவ்உதவி வழங்கும் நாடுகள் யுத்தத்தைத் தவிர்க்கும் முகமாக சிறிலங்கா அரசு புலிகளின் நியாயபூர்வமான கோரிக்கையை ஏற்றுப் பேச்சுவார்த்தைக்குச் செல்வதற்கான அழுத்தமாக தமது நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கலாம்.

இதனைத்தவிர சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசினதும், ஜே.வி.பி.யினதும் வேறு பல நடவடிக்கைகளும் இவ் உதவி வழங்கும் நாடுகள் சனாதிபதி சந்திரிகா அரசாங்கத்தின் மீதான அழுத்தத்தைப் பிரயோகிக்க முற்பட்டுள்ளமைக்குக் காரணமாக இருத்தல் முடியும். இத்தகையதொரு நிலைக்குப் பல்வேறு காரணிகளைச்சுட்டிக்காட்ட முடியும்.

முதலில் சந்திரிகா குமாரதுங்க அரசு தற்பொழுது கைக்கொள்ளும் வெளியுறவுக்கொள்கையானது மேற்குலகினை விட இந்தியாவிற்கு முதன்மையும், முக்கியத்துவமும் கொடுப்பதான காரணமாக கிளிநொச்சி செல்ல உலங்குவானூர்தி அனுப்ப மறுப்புத் தெரிவித்தமை போன்றவை நோர்வேயைச் சிறுமைப்படுத்தும் செய லாகவே இருந்தது.

அது மட்டுமல்லாது ஜப்பான் சமாதான முயற்சியில் எடுத்துக்கொண்ட அக்கறை, ஆர்வம் என்பன சிறிலங்கா அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படவில்லை. ஜப்பான் விசேட தூதுவராக ஒரு மூத்த இராஜதந்திரியாக யசூசிஅகாசி அவர்களை நியமித்தபோதும் சிறிலங்கா அரசாங்கத்தினால் அவருக்குரிய மரியாதை அளிக்கப்படவில்லை. ஒருவகையில் யசூசி அகாசி சனாதிபதி சந்திரிகாவினால் ஏமாற்றப்பட்டார் என்றே கொள்ளலாம். எடுத்துக்காட்டாக சனாதிபதி சந்திரிகா ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தைக் கலைக்கப் போவதில்லை என வாக்குறுதி அளித்திருந்த போதும் குறுகிய காலப்பகுதிக்குள்ளேயே ரணில் அரசாங்கத்தைக் கலைத்தார். இது அகாசிக்குப் பெரும் ஏமாற்றமாகவும், அவமானமாகவும் இருந்தது.

அடுத்ததாக யசூசி அகாசியிடம் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்துப்பேச தான் தயாராக இருப்பதாக சனாதிபதி சந்திரிகா தெரிவித்ததோடு அதுகுறித்து புலிகளுக்கு அறியப் படுத்தியதாகவும் தெரிவித்திருந்தார். ஆனால் யசூசி அகாசி அது குறித்துப் புலிகளிடம் வினவியபோது அதில் எதுவித உண்மையும் இல்லை என்பது தெரிய வந்தது. இது யசூசி அகாசிக்குப் பெரும் கவலையளிப்பதாக இருந்தது.

இந்தவகையில் சமாதான முயற்சியில் ஈடுபட்ட நாடுகள் அவமானப்படுத்தப் பட்டமை ஒருபுறம் இருக்க, இம்முறை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் முன்னணி அரசாங்கம் முன்வைத்த வரவு-செலவுத் திட்டமானது உதவி வழங்கும் நாடுகளை ஒருபொருட்டாகக் கொள்ளாதது மட்டுமல்ல, அவர்களின் நலன்களைப் பாதுகாப்பவையாகவும் அமையவில்லை. இது பயன் படுத்துவதாகவே இதுகொள்ளத் தக்கதாகிறது.

இவற்றிற்கும் அப்பால் இந்திய கரையோரக் கடற்படையும், சிறிலங்கா கடற்படையும் இணைந்து மேற்கொள்ளும் கூட்டுப் பயிற்சியானது இரு தரப்பிற்கும் இடையிலான இராணுவ ரீதியிலான ஒத்துழைப்பை மட்டுமல்ல, இப்பிராந்தியத்தில் இந்தியாவின் செல்வாக்கு உறுதி செய்யப்பட்டமையும் அதற்குச் சிறிலங்கா பூரண ஒத்துழைப்பு வழங்குகின்றமையும் இந்நாடுகளின் கவனத்தைக் கவர்ந்ததாக இருந்திருத்தல் கூடும்.

இந்த வகையில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அப்பாலும் சனாதிபதி சந்திரிகா அரசாங்கத்தின் போக்கினைக் கட்டுப்படுத்தவும் வரையறை செய்து கொள்ளவும் சில தேவைகள் உதவி வழங்கும் நாடுகளுக்கு இருத்தல் கூடும். ஏனெனில் எந்த நாடும் தமது நலன்கள் பாதுகாக்கப்படுதல் என்பதில் விட்டுக் கொடுப்புக்கள் செய்துகொள்ளப் போவதில்லை.

ஆகையினால், சிறிலங்கா அரசின் மீதான அழுத்தத்திற்கு இந்நாடுகள் சமாதானம் - சனநாயகப் பண்புகள் ஆகியவற்றின் பாதுகாப்பு என்ற ரீதியிலோ அன்றி மேற்குலகத்தின் நலன் - தமது ஆதரவாளர்களின் நலன் என்பனவற்றின் காரணமாகவே இருக்கலாம் சிலவேளை இவை அனைத்தின் காரணமாகவும் இருக்கலாம்.

ஆனால் காரணிகள் எதுவாக இருப்பினும் சனாதிபதி சந்திரிகா அரசாங்கத்தின் மீது அழுத்தம் பிரயோகிக்கும் நிலை ஒன்று உருவாகியுள்ளமை வரவேற்கத் தக்கதொன்றே. ஏனெனில் சமாதான முயற்சிகளில் உடனடியான முன்னேற்றங்கள் காணப்படாது போனால் இலங்கை மீண்டும் ஒரு யுத்தத்தை எதிர்கொள்வது தவிர்க்கப்பட முடியாததாகவே இருக்கும்.

ஜெயராஜ்

□

# சிங்கள அமைப்பு முன்னேற்பாடு!

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் யுத்தம் ஒன்றுக்கு தயாரானால் திருகோணமலை மாவட்ட சிங்களக் கிராமங்களைப் பாதுகாப்பதற்கு விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்போவதாக வடகிழக்கு சிங்கள அமைப்பு தெரிவித்துள்ளது. யுத்தம் ஒன்று ஏற்படுமாயின் தங்களின் குடும்பங்களையும், கிராமத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்கு "தங்களைப் காக்கும் சங்கம்" என்ற பெயரில் இது இயங்கும். தற்பொழுது தி ணமலை, மொரவெவ, வில்கம், பாரகுளம், கெமுனுபுர,வ ஆகிய இடங்களில் இச் சங்கம் இயங்கி வருகின்றது என ாதீப செய்தி வெளியிட்டுள்ளது.

-பதினெட்டுக் கோரிக்கைகளை முன்வைத்து-

# சிறிலங்கா தபால் ஊழியர் சங்கம் தொழிற்சங்கப் போராட்டத்திற்குத்தயார்!

(கொழும்பு)

பதினெட்டுக்கோரிக்கைகளை முன்வைத்து இம் மாதம் 27ஆம் திகதி நாடு தழுவிய தொழிற்சங்கப் போராட்டம் நடத்தப்போவதாக சிறிலங்கா தபால் ஊழியர் சங்க பிரதமசெயலாளர் கே.எஸ்.வீரசேகர தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிற்கேற்ற சம்பள உயர்வு, வெற்றிடங்கள் உடன்நிரப்புதல்,தொலைபேசித் தொடர்புகளுக்கு அதிகாரிகளிடம் இருந்து கட்டணங்கள் அறவிடாமை உள்ளிட்ட பல விடயங்கள் சம்பந்தமான போராட்டம் நடத்தப்போவதாகதபால் தொலைத்தொடர்புகள் அமைச்சின் செயலாளர் நாயகத்திற்கு தபால் ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

# நீதிமன்றில் குண்டுப்புரளி!

சிலாபம் மாவட்ட நீதிமன்றின் நடவடிக்கைகள் நிகழும்போது நேற்றுமுன்தினம்அங்கு ஏற்பட்ட திடீர் குண்டுப்புரளி காரணமாக நீதிமன்றம் அல்லோலகல்லோலப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. மாவட்ட நீதிமன்றிலும், மேன்முறையீட்டு நீதிமன்றிலும் விசாரணைகள் நடைபெறறவேளை சிறைக்கூண்டில் குண்டுவைக்கப்பட்டிருப்பதாக ஒருவர் கத்தியதையடுத்து அங்கு வருகை தந்திருந்த 200இற்கும் மேற்பட்டோர் நீதிமன்றத்தை விட்டு ஓடியதாகவும் இதனால் நீதிமன்ற நடவடிக்கைகள் சிறிதுநேரம் பாதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

# அறிவித்தல்

## தமிழீழ வைப்பகம்

தமிழீழ வைப்பகத்தின் எக்கிளையிலாவது 01.10.2001 தொடக்கம் 31.12.2002 வரையான காலப்பகுதியில் (01 வருட கால அடகுக் கடன் சேவை), 01.11.2003 தொடக்கம் 31-01-2004 வரையான காலப்பகுதியில் (06 மாதகால அடகுக்கடன் சேவை),அடகுக் கடனைப் பெற்று உரிய காலத்தில் அவற்றை மீளச்செலுத்தத் தவறிய கடனாளிகளின் அடகு நகைகளைத் தமிழீழ வைப்பகம் விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளது. எனவே உரியவர்கள் 24.12.2004 ஆம் நாளுக்கு முன்னர் அடகு நகைகளை மீட்டுக் கொள்ளுமாறு அல்லது புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.

மேலாளர்,
ஆளுகைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி.10965)

# சாவு அறிவித்தல்

பிரதான வீதி கண்டாவளையைப் பிறப்பிடமாகக்கொண்ட வல்லிபுரம் யோகபரன் [பரன்] என்பவர் 17.12.2004 சாவடைந்துள்ளார். அன்னார் வல்லிபுரம் மகேஸ்வரி தம்பதிகளின் அன்புப்புதல்வனும் தெய்வரஞ்சி [பிரதி மாகாண சுகாதார பணிமனை கிளிநொச்சி], சோலைத்தமிழ் [போராளி], குகணேசன்,கஜோதரன்[பிரான்ஸ்], துதிகரன், கருணாரஞ்சினி, குமுதாரஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பென்னம்பலம் லட்சுமியின் அன்புப் பேரனும், விநாயகமூர்த்தியின் மைத்துனரும் ஆவார். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்,
போராளி.
[சோலைத்தமிழ்]

(5415)

# முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் உலருணவுப் பொருட்கள் வவுனியாவிலிருந்து பாரவூர்திகள் மூலமாகக் கொண்டு வருவதற்கான கூறுவிலை கோருதல்

*முல்லைத்தீவு மாவட்டத்தில் நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கு 2005 சனவரி தொடக்கம் 2005 டிசம்பர் மாதம்வரை சீனி,பருப்பு,மாவு, அரிசி ஆகியவற்றை வவுனியாவிலிருந்து கொண்டுவந்து கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ப.நோ.கூ.சங்கங்களிலும், முல்லைத்தீவிலுள்ள அரச களஞ்சியத்திலும் ஒப்படைப்பதற்காக வன்னி மாவட்டத்தில் இயங்குகின்ற அங்கீகரிக்கப்பட்ட ப.நோ.கூ.சங்கங்கள் பாரவு,ர்தி சங்கங்களிடமிருந்து முல்லைத்தீவு மாவட்டகேள்விச்சபைத்தலைவரினால் பொறியிடப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலைகள் பத்தாயிரம் (10,000 கி.கிராம்) கிலோகிராமுக்கு ஒரு கிலோமீற்றருக்கு என்ற அடிப்படையில் குறிப்பிடப்படவேண்டும்.*

## விநியோகிக்கப்படவேண்டிய இடங்களும், அவற்றிற்கான தூரங்களும்

| | | | |
|---|---|---|---|
| 01. | கரைதுறைப்பற்று ப.நோ. கூ. சங்கம் | முள்ளியவளை | 89 கி.மீ |
| 02. | புதுக்குடியிருப்பு ,, | புதுக்குடியிருப்பு | 112 கி.மீ |
| 03. | விசுவமடு ,, | விசுவமடு | 101 கி.மீ |
| 04. | முத்துஐயன்கட்டு ,, | ஒட்டுசுட்டான் | 72 கி.மீ |
| 05. | வவுனியா வடக்கு ,, | காிப்பட்ட முறிப்பு | 57 கி.மீ |
| 06. | பனங்காமம்பற்று ,, | வவுனிக்குளம் | 67 கி.மீ |
| 07. | துணுக்காய்ப்பகுதி ,, | துணுக்காய் | 71 கி.மீ |
| 08. | முல்லைத்தீவு அரச களஞ்சியம் | முல்லைத்தீவு | 96 கி.மீ |

(01) முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் புனர்வாழ்வு,புனரமைப்பு செயலகத்தில் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/=ஐசெலுத்தி 2004.12.20 ஆம் திகதி தொடக்கம் 2004.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் கூறுவிலைப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(02) ***வரையறைகள்***

அ. தொடரணி உத்தியோகத்தர் கேட்கும்போது தேவையான பாரவூர்திகள் விடுவிக்கப்பட வேண்டும்.

ஆ ஒரு லோட்டிற்கு (10,000கி.கிராம்) இருபத்தைந்து (25 கி.கி) கிலோக்கிராமிற்கு மேலதிகமாகச் சோர்வு ஏற்படுமிடத்து அச்சோர்வுக்கான பெறுமதி அந்தப் பாரவூர்திக்கான கூலியிலிருந்து அறவிடப்படும்.

இ. பாதுகாப்பான முறையில் குறிப்பிடப்பட்ட இடங்களில் பொருட்கள் ஒப்படைக்கப்பட வேண்டும்.

ஈ. பொருட்கள் ஒப்படைக்கப்பட்டமைக்கான உறுதிப்பத்திரம் கூலி பெற்றுக்கொள்ளும்போது சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(03) ***கொடுப்பனவுகள்***

ஒப்படைக்கப்பட்ட பொருட்கள் சரியானது என்பதனை அதற்கென நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரால் சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னர் கொடுப்பனவு செய்யப்படும். அவ்வாறான சான்றிதழ் புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலகத்திற்குக் கிடைத்த திகதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் காசோலை மூலம் கொடுப்பனவு செய்யப்படும்.

(04) பூரணப்படுத்திய இரு கூறுவிலைக் கோரல் படிவங்களைத் தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, மாவட்டச்செயலகம்,முல்லைத்தீவு (அரசாங்க அதிபர்,முல்லைத்தீவு) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/பதிவுத்தபால் மூலமாகவோ முல்லைத்தீவு செயலக புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலை கோரல் பெட்டியில் 2005.01.10 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் முற்பகல் 11.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம், கூறுவிலைக்காரர் அல்லது அவரது எழுத்து மூலமாக அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

*திருமதி.இமெல்டா சுகுமார்,*
*கேள்விச்சபைத் தலைவர்/அரசாங்க அதிபர்,*
*முல்லைத்தீவு மாவட்டம்.*

(சி.10532)

உன்னத விளைச்சலுக்கு உகந்த உரம்

இலங்கை உரம்

வழங்குநர் கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், பரந்தன்.

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

0777552843

யாழ்.சாலை, பரந்தன்.

(சி.10978)

அதி உன்னத

சுவையுள்ள முழு ஆடைப் பால் மா

முற்றிலும் இயற்கையானது

லக்ஸ்பிறே




கிளிநொச்சி மாவட்ட முகவர்:-

கரைச்சி வடக்கு ப.நோ.கூ/வுச் சங்கம்

பரந்தன்

மொத்தமாகவும், சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ளலாம்

0777552843

முல்லைசாலை, பரந்தன்

(சி.10979)

ஒளிர் வன்னி ஆடைகள் விற்பனையகம்

நத்தார் பண்டிகையை முன்னிட்டு...

18.12.2004-24.12.2004 வரை

ஒளிர் வன்னி ஆடை உற்பத்தி நிலையத்தில் உற்பத்தியாக்கப்பட்ட ஆடைகள்,

விசேட கழிவுடன்...

மாபெரும் மலிவுவிற்பனை

☞ மழைக்கோட்டுகள் உட்பட சிறுவர், சிறுமிகளுக்கான ஆடைகள், பெண்கள், ஆண்களுக்கான ஆடைகள் என்பனவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்,

☞ ஒளிர் வன்னி ஆடைகள் விற்பனையகம்

சந்தை உட்புறம்,

கிளிநொச்சி.

(சி.11040)


# தமிழ்நாட்டிற்கு 550 கோடி கடனுதவி

## உலகவங்கி அறிவிப்பு

தமிழ்நாட்டுக்கு ரூ550 கோடி கடன் உதவி வழங்க உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.இது தொடர்பாக உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது; தமிழக அரசு சிறந்த முறையில் மக்களுக்கு சுகாதார வசதிகள் செய்து கொடுக்க உதவியாக ரூ.550 கோடி கடன் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. தனியாரும், அரசுத்துறையும் இணைந்து சுகாதார வசதிகளை மேம்படுத்துவது,தரமான சுகாதார வசதிகளை அளிப்பது, தொற்று வியாதி அல்லாத புது விதமான நோய்களால் ஏற்பட்டு வரும் தொல்லைகள் பற்றி மக்களிடம் எடுத்துச்சொல்வது போன்றவற்றுக்காக தமிழக அரசின் சுகாதாரத்திட்டத்துடன் இணைந்து உலக வங்கி செயற்பட இந்த நிதி பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# மூன்று மாநிலங்களுக்கான தேர்தல் வரும் பெப்ரவரியில்

பீகார்,ஹரியானா,ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் சட்டசபைத் தேர்தல்கள் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 3,15 மற்றும் 23 ஆகிய திகதிகளில் மூன்று கட்டமாக நடைபெறும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

243 உறுப்பினர்களைக் கொண்ட பீகார் சட்டசபை மற்றும் 81 உறுப்பினர்களைக் கொண்ட ஜார்க்கண்ட் மாநிலங்களின் 5 ஆண்டுகால ஆயுட்காலங்கள் மார்ச் மாதம் 6 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. 90 உறுப்பினர்களைக் கொண்ட ஹரியானா சட்டசபை ஆயுட்காலம் மார்ச் மாதம் 8 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இதையொட்டி இந்த 3 மாநிலங்களின் சட்டசபைத் தேர்தல் திகதிகளை தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

# அரசியலும், பாரதிய ஜனதாவும் எனக்கு ஒன்று தான் — உமாபாரதி

"அரசியலும், பா.ஜனதா கட்சியும் எனக்கு ஒன்றுதான் இரண்டையும் நான் தனித்தனியாகப் பிரித்துப் பார்க்கவில்லை. பா.ஜனதா கட்சியை அழிக்க வேண்டும். என்று நான் கற்பனை செய்து கூடப் பார்த்ததுமில்லை". இவ்வாறு கூறியுள்ளார் முன்னாள் மத்திய பிரதேச முதல்வர் உமாபாரதி.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்; நமது நாட்டு அரசியல் முறை "கோமா" நிலையை நோக்கிப் போய்க் கொண்டு இருக்கின்றது என்றார்.

உமாபாரதி நேற்று முன்தினம் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட பின்னர் முதன்முறையாக போபால் சென்றார். அங்கு அவர் கருத்து வெளியிடுகையில்; பா.ஜனதா கட்சியில் என்னை மீண்டும் சேர்க்கக் கூடாது என்பதற்காக எனக்கு எதிராகச் சதி நடக்கிறது. இதற்காக நான் புதுக்கட்சி தொடங்க மாட்டேன். அது பற்றி சிந்தனையே என்னிடம் இல்லை. கல்யாணசிங், சங்கர்சிங் வகேலா போல நான் புதிய கட்சி தொடங்க மாட்டேன். பா.ஜனதாத் தலைவர்களைப் பற்றி நான் எழுதியது போன்ற ஒரு போலியான கடிதத்தைத் தயாரித்து பத்திரிகையில் வெளியிடச் செய்தார்கள். இது போன்ற கடிதத்தை நான் எழுதவே இல்லை என்று கட்சித்தலைவர் அத்வானியிடம் விளக்கிக் கூறிவிட்டேன்.

என்னை மீண்டும் கட்சியில் சேர்ப்பதற்கான 50 சதவீத வேலைகளை நான் செய்து முடித்துவிட்டேன். மீதி உள்ள 50 சதவீத பணி கட்சித் தலைவர் கையில் உள்ளது. அவர்தான் முடிவு எடுக்க வேண்டும்.

எனது செல்வாக்கை நிரூபிக்க மத்திய பிரதேச மாநிலத்தை பயன்படுத்த மாட்டேன். அரசியல் செய்வதற்காகவும் நான் போபால் வரவில்லை. பா.ஜனதா கட்சியை பலப்படுத்த உறுதி செய்துள்ளேன். காங்கிரஸ் கட்சியை பலவீனப்படுத்துவேன் இவ்வாறு உமாபாரதி கூறினார்.


05 ஆம் ஆண்டு நினைவில்

கடல் கடந்த கண்ணீர்

தாயின் மடியில் 19 - 05 - 1978



தாயகமண்ணில் 19 - 12 - 1999

லெப்ரினன்ட் ஈழச்செழியன்

சண்முகநாதன்-சுரேஸ்காந்தன்

02 ஆம் வட்டாரம், மு.புதுக்குடியிருப்பு


பட்டப்பகல் பகலவனும் அஞ்சினான் போர்கண்டு
திட்டமிட்டு சிறப்புச் சாள்ஸ்படை முட்டி மோதியது பரந்தனில்
சிட்டியாய் ஈழச்செழியன் சீறிப்பாய்ந்தான் களம்நோக்கி
கட்டிய எதிரி கோட்டை கற்பூரப் பொடியானது
மட்டிலா என் அண்ணாவே மறக்கமுடியவில்லை ஐந்தாண்டும்
பொட்டுத்தந்த மன்னருடன் போற்றுகிறேன் இந்நாளில்

முகவரி-தா.சண்முகநாதன்
கோம்பாவில்
2ஆம் வட்டாரம்
மு.புதுக்குடியிருப்பு

தகவல்-
ரவி,சுதா குடும்பம்
(மைத்துனர், சகோதரி)
சுவிஸ்


(5069)

# பாகிஸ்தான் முன் பெரும் இலக்கை நிர்ணயித்துள்ள அவுஸ். அணி!



அவுஸ்திரேலிய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே பேர்த் நகரில் நடைபெறும் முதலாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாளான நேற்று ஆட்டமுடிவில் பாகிஸ்தான் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸிஸ் ஒரு விக்கெட் இழப புக்கு 18 ஓட்டங்களைப் பெற்றிருந் தது. இம்ரான் பர்ஹக் ஒரு ஓட்டத் துடன் ஆட்டமிழந்தார். இவரது விக்கெட்டை மெக்ராத் கைப்பெற் றினார். சல்மான்பட் 8 ஓட்டங்களு டனும், யுனிஸ்கான் 7 ஓட்டங் களுடனும் ஆட்டமிழக்காது இன் றைய நான்காம் நாள் ஆட்டத்தைத் தொடரவுள்ளனர்.

முன்னதாக விக்கெட் இழப் பின்றி 15 ஓட்டங்களுடன் தனது இரண்டாவது இன்னிங்சை ஆரம் பித்த அவுஸ்திரேலிய அணி 5 விக் கெட் இழப்பிற்கு 361 ஓட்டங் களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. மார்ட்டின் ஆட்டமிழக்காது 100 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். ஜஸ்




சிங் லாங்கர் 97 ஓட்டங்களையும், அணித்தலைவர் பொண்டிங் 98 ஓட்டங்களையும் பெற்றனர். கிளார்க், ஹெய்டன், லேமன் முறையே 27,10,05 ஓட்டங்கள்.

பந்துவீச்சில் கனேடியா இரு விக்கெட்டுக்களையும் அக்தர், சமி, ரஸாக் தலா ஒரு விக்கெட்டுக் களையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸில் அவுஸ் திரேலியா 381 ஓட்டங்களையும், பாகிஸ்தான்179 ஓட்டங்களையும் பெற்றிருந்தன.

வெற்றி பெறுவதானால் 546 ஓட்டங்களையும் பெறவேண்டிய நிலையில் பாகிஸ்தான் அணி



உள்ளது. கைவசம் 9 விக்கெட்டுக் களே உள்ளன.

# வேகப்பந்து வீச்சாளர்! அக்தருக்கு அபராதம்!



அவுஸ்திரேலியா- பாகிஸ்தான் அணிகளுக் கிடையேயான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பேர்த் நகரில் நடைபெற்று வருகிறது.

இதன் முதல் இன்னிங்ஸ்சில் பாகிஸ்தால். வேகப்பந்து வீச்சாளர் சொஹைப் அக்தர் 5 விக்கெட் கைப்பற்றினார். தொடக்கவீரர் ஹைடன் அவரது பந்தில் 4 ஓட்டத்தில் எல். பி.டபிள்யூ ஆனார். அப்போது சொஹைப் அக்தர் இரண்டு கைகளை ஹைடனை நோக்கி காட்டி வெளியே போகுமாறு சமிக்கை செய்தார்.

அக்தரின் இந்தச் செயல் விதி முறை களுக்கு மாறானது என்று கூறி ஐ.சி.சி நடுவர் மதுகல்லே அவருக்கு போட்டியில் இருந்து பெறும் பணத்தில் 40 சதவீதம் அபராதம் விதித்து உள்ளார்.

இது தொடர்பாக சோஹைப் அக்தர் கூறும் போது உணர்ச்சி மிகுதியால் அப்படிச் செய்தேன் வேறு எந்த நோக்கமும் தனக்கு இல்லை என்றார்.

# சிட்டகாங் டெஸ்ட் போட்டி பங்களாதேஷ் 54/3

(சிட்டகொங்)


இந்திய-பங்களாதேஷ் அணி களுக்கிடையேயான இரண்டா வதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் பங்களாதேஷ் அணி முதலாவது இன்னிங்சில் 3 விக்கெட் இழப்புக்கு 54 ஓட்டங்க ளைப் பெற்றிருந்தது. நவீஸ் இக் பால் 31 ஓட்டங்களையும், ஜாவிட் ஓமர் 10 ஓட்டங்களையும், மஷ்ரப் மொர்தாஸா 4 ஓட்டங்களையும், பெற்று ஆட்டமிழந்தனர். அணித் தலைவர் ஹபிபுல் பஷார் ஆட்டமி ழக்காமலும், அதுவரை ஓட்டமெது வும் பெறாமலுமிருந்தார். பந்துவீச் சில் கும்ளே 14 ஓட்டங்களுக்கு இருவிக்கெட்டுக்களையும; ஹர்பஜன்சிங் 7 ஓட்டங்களுக்கு ஒருவிக்கெட்டையும் கைப்பற்றி யிருந்தனர்.



முன்னதாக இருவிக்கெட் இழப்புக்கு 334 ஓட்டங்கள் என்ற நிலையில் தனது இரண்டாம் நாள் ஆட்டத்தை இந்திய அணி ஆரம் பித்தது. ராவிட் 145 ஓட்டங்கள், சச்சின் 36 ஓட்டங்கள், என்ற நிலை யில் தொடங்கிய ஆட்டத்தில் சச் சின் மேலதிமாக ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார் மஷ்ரப் மொர்தாஸாவின் பந்துவீச்சில் L.B முறையில் இவர் ஆட்டமிழந் தார். தொடர்ந்து இந்திய அணி 540 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந் தது. ராவிட் 160 ஓட்டங்களையும், அணித்தலைவர் கங்குலி 88 ஓட் டங்களையும் ஹர்பஜன் சிங் 47 ஓட்டங்களையும் பெற்றனர். லக்ஷ்மன், தினேஸ்கார்த்திக் பதான், கும்ளே முறையே 09,11, 04,23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் முகமட் ரவீக் 156 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக் களையும், மஷ்ரப் மொர்தாஸா 60 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை யும், நஸ்முல் ஹுசைன் 114 ஓட் டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை யும், மொகமட் அஷ்ரபுல் 29 ஓட் டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றியிருந்தனர். இன்று ஆட் டத்தின் மூன்றாவது நாளாகும்.

விளையாட்டு

# அனைத்து நாட்டிலும் சதம் அடித்தார் ராகுல் ராவிட் புதிய சாதனை!



வங்களாதேசத்துக்கு எதிராக சிட்டாங்கில் நேற்று முன்தினம் தொடங்கிய 2 ஆவது டெஸ்டில் ராகுல்ராவிட் சிறப்பாக விளையாடி சதம் அடித்தார். இதன் மூலம் அவர் புதிய உலக சாதனை படைத்தார். டெஸ்ட் போட்டியில் விளையாடும் அனைத்து நாட்டிலும் அவர் சதம் அடித்து உள்ளார். வேறு எந்த வீரரும் இப்படி அனைத்து நாட்டு மண்ணிலும் சதம் எடுத்தது கிடையாது.

ராவிட் இந்தியாவில் 6 சதமும், இங்கிலாந்தில் 3 சதமும், நியூசிலாந்தில் 2 சதமும், அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், தென்ஆபிரிக்கா, மேற்கிந்தியத்தீவு, இலங்கை, சிம்பாப்வே, வங்களாதேசம் ஆகிய நாட்டில் தலா ஒரு சதமும் அடித்துள்ளார்.

டெஸ்ட் போட்டியில் விளையாடும் அனைத்து நாடுகளுக்கு எதிராக சதம் அடித்த 4 ஆவது வீரர் என்ற பெருமையை ராவிட் பெற்றார். கிறிஸ்டன் (தென்ஆபிரிக்கா), ஸ்டீவ்வாக் (அவுஸ்திரேலியா), டெண் டுல்கர் (இந்தியா), ஆகியோர் அனைத்து நாடுகளுக்கு எதிராக சதம் அடித்து உள்ளனர்.

ராவிட்டின் நேற்றைய சதம் 18 ஆவது செஞ்சரி ஆகும். இதன் மூலம் அதிக சதம் அடித்த இந்திய வீரர்களில் 4 ஆவது இடத்தைப் பிடித்தார். கவாஸ்கர், டெண்டுல்கர் ஆகியோர் தலா 34 சதமும், அசாரு தீன் 22 சதமும் அடித்து உள்ளனர்.

# போர்ட் எலிசபேத் டெஸ்ட் இங்கிலாந்து சிறப்பான தொடக்கம்

தென்னாபிரிக்கா-இங்கிலாந்து அணிகளுக்கிடையே போர்ட் எலிசபேத்தில் நடைபெறும் முத லாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று ஆட்ட முடிவில் இங்கிலாந்து அணி விக் கெட் இழப்பின்றி 109 ஓட்டங் களைப் பெற்றிருந்தது. ஸ்ரைரிஸ் 54 ஓட்டங்களுடனும் இன்று ஆட் டத்தைத் தொடரவுள்ளனர்.

முன்னதாக ஒரு விக்கெட் இழப்



புக்கு 273 ஓட்டங்கள் என்ற நிலை யில் தனது முதலாவது இனிங் ஸைத் தொடர்ந்த தென்னாபிரிக்க அணி 337 ஓட்டங்களுக்கு ஆட்ட மிழந்தது. டிப்பென்னர் 110 ஓட்டங்க ளைப் பெற்றார்.

பந்து வீச்சில் ஹோகூட், பிளின்டொப் தலா மூன்று விக்கெட்டுக்களையும் கைல்ஸ் இரு விக்கெட்டுக்களையும், ஹர் மிசன், ஜோன்ஸ் தலா ஒரு விக் கெட்டையும் கைப்பற்றினர். இன்று ஆட்டத்தின் மூன்றாவது நாளாகும்.

- பூஜா ஞாபகார்த்த மெ.ப. கிரிக்கெட் -

# கனகபுரம் மைதானத்தில் சிறப்புற அமையம்!

(அலுவலக செய்தியாளர்)

கனகபுரம் விளையாட்டுக்கழக அனுசரணையுடன் நடாத்தப்படும் அமரர் சத்தியதர்ஷன் பூஜிதா (பூஜா) ஞாபகார்த்த மென்பந்துத் துடுப்பாட்ட வெற்றிக் கேடயப் போட்டியின் முதல் நாள் போட்டி நேற்று கனகபுரம் விளையாட்டுக் கழக மைதானத் தில் நடைபெற்றுள்ளது.

முதலில் கனகபுரம் எதிர் கிஸ்ணபாரதி என்றமைந்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கனகபுரம் Bஅணி 15 பந்துப் பரிமாற்ற முடிவில் 8 விக்கட்களை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிஸ்ணபாரதி அணி 9ஆவது பந்து பரிமாற்றத்தின் போது 5 விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இரண்டாவது போட்டி கனகபுரம் எதிர் இளந்தென்றல் என்றமைந்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றியீட்டிய கனகபுரம் A அணி முதலில் துடுப்பெடுத்தாடி 14 பந்துப் பரிமாற்றத்தில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இளந் தென்றல் அணி 11ஆவது பந்துப் பரிமாற் றத்தின் போது அனைத்து விக்கெட்டுக் களையும் இழந்து தோல்வியைத் தழுவியது.

மூன்றாவது போட்டியில் ஸ்கந்தா எதிர் இளம் தளிர் என்றமைந்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றியீட்டிய ஸ்கந்தா அணி முதலில் துடப்பெடுத்து ஆடியது. இதில் 14 ஆவது பந்துப் பரிமாற்றத்தின் போது அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 40 ஓட்டம் பெற்றால் வெற்றி என்ற நிபந்தனைக்கு இணங்க களமிறங்கிய இளந்தளிர் அணி 9 பந்துப் பரிமாற்றத்தின் போது 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியை இலக்காகிக் கொண்டது.

நேற்றைய போட்டிகளுக்கு நடுவர் களாக சுபானந், குமார், தனபாலன் ஆகி யோர் கடமையாற்றியுள்ளனர். இதே வேளை மென் பந்துபோட்டியின் தொடர் போட்டிகள் யாவும் குறிப்பிட்ட நேரத்தில் நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(கு.ச)

-மாவீரர் தின உதைபந்தாட்டம்

# கிளி.மாவட்டத்திற்கான இறுதிப் போட்டியில் லக்கிஸ்ரார்

மாவீரரின் நினைவாக கிளி.மாவட்ட அணிகளுக்கிடையே நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் பங்கு பெற வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி தகுதி பெற்றுள்ளது.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் மருதநகர் உதயதாரகை மைதானத்தில் நடைபெற்ற பரபரப்பான அரையிறுதி ஆட்டத்தில் 4-3 என்ற கோல் கணக்கில் லக்கிஸ்ரார் அணி பரந்தன் இளைஞர் வட்ட அணியை வெற்றி கொண்டது.


ஆட்டத்தின் முதல் பாதியில் லக்கிஸ்ரார் வீரர்கள் ரமேஸ்காந்த் (எஸ்.வி) ,ஜெயந்தன் ஆகியோர் தலா ஒரு கோல் போட்டு தமது அணியை முன்னிலைப்படுத்தினர், எனினும் இளைஞர் வட்ட வீரர் சிவகுமார் (அப்பன்) அபாரமான கோல் ஒன்றைப் போட்டு தமது அணியின் கணக்கை ஆரம்பித்தார். தொடர்ந்து லக்கிஸ்ரார் அணி வீரரொரு வரின் முறையற்ற ஆட்டத்தால் கிடைத்த தண்ட உதை சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இளைஞர் வட்ட வீரர் அருந்தவராசா கோல் போட்டு நிலமையைச் சமப்படுத்தினார். தொடர்ந்து சில நிமிட நேரத்தில் அவரே மற்றொரு கோல் போட்டு 3-2 என்ற கணக்கில் இடைவேளை வரை தமது ணியின் கையை மேலோங்க செய்தார்.

இடைவேளையின் பின் ஆட்டம் மேலும் சூடு பிடித்தது. ஆட்டத்தின் பிற் பகுதியில் லக்கிஸ்ரார் வீரர் சுதாகரன் அருமையான long shot ஒன்றின் மூலம் கோல் போட்டு நிலமையைச் சமப்படுத்தியதுடன் சில நிமிடத்தில் மற்றொரு கோல் போட்டு தமது அணி இறுதிப் போட்டியில் பங்கு பற்ற வழி சமைத்தார்.

நேற்றைய போட்டிக்கு பிரதம நடுவராக க.புவனேந்திரராசாவும், பக்க நடுவர்களாக ம.பத்மநாதன், சிவனேசன் ஆகியோரும் கடமையாற்றினர்.

இறுப்போட்டியில் எதிர்வரும் 22 ஆம் திகதி (புதன்கிழமை) பிற்பகல் 3 மணிய ளவில் லக்கிஸ்ரார் - நாச்சிக்குடா சென் மேரிஸ் அணிகளுக்கிடையே நடைபெறும்.

(சோ)



## சிந்தனைக்கு

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நானறிவேன், ஆனால் உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 19-12-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## தெரிவு என்ன?

"நோர்வே அரசு சமாதான முயற்சிகளில் இருந்து வெளியேறினால் யுத்தம் தவிர்க்க முடியாததாகிவிடும" என சனாதிபதி சந்திரிகாவிடம் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் உறுதியாகவும், தெளிவாகவும் வலியுறுத்திக் கூறியிருப்பின் அது நிதர்சனமானதொன்றே.

ஆனால் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படவில்லை என்பதும்- இதனால் நாடு யுத்தம் ஒன்றை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்குத் தெரியாததொன்றல்ல.

ஏற்கனவே தமிழீழ தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் தனது மாவீரர் நாள் உரைமூலம் அரசாங்கம் அதன் நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் எனக் கோரியிருந்தார். இதனை ஓரளவு வெளிப்படையாகவே சமாதானப் பேச்சு வார்த்தையா? யுத்தமா? எனஅரசாங்கமே தீர்மானிக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஆகையினால் தமது நடவடிக்கைகள் யுத்தத்தை நோக்கியே செல்கின்றன என்பதை சனாதிபதி சந்திரிகா புரிந்து கொண்டிருத்தல் கூடும். ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவரது சகாக்களும் யுத்தத்தை அரசாங்கம் விரும்பவில்லை என்றே கூறுகின்றனர்.

இதனை வலியுறுத்துமாப் போன்று இரண்டு தினங்களுக்கு முன்பும், அமைச்சரும் சனாதிபதியின் சகோதரருமான அநுர பண்டாரநாயக்கவும் பேசியுள்ளார். அவர் "விடுதலைப்புலிகளுடன் மீண்டும் ஒரு யுத்தத்திற்குப் போகும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை" எனத் தெரிவித்தார்.

ஆனால் ஆளும் கட்சியினரின் இக் கூற்றுக்கள் பொருட்படுத்தத் தக்கவையோ. நம்பிக்கை கொள்ளத்தக்கவையோ அல்ல. ஏனெனில் சமாதானப் பேச்சுவார்த்தை பற்றியும் இவ்வாறே இவர்கள் கூறுகின்றனர். அதாவது இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமே தீர்வுவெனக் கூறுகின்றனர். ஆனால் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் அவர்கள் ஆர்வம் காட்டியதாக இல்லை. இந்த வகையில் அவர்கள் யுத்தத்திற்குப் போகப்போவதில்லை எனக் கூறினும் அவர்களின் நடவடிக்கைகள் யுத்தத்தை நோக்கி நாட்டம் கொண்டு செல்வதாகவே உள்ளது.

ஆகையினால் நோர்வே கூறித்தான் சனாதிபதி சந்திரிகாவுக்கு யுத்தம் வரும் என்று தெரிய வேண்டும் என்பதல்ல ஆனால் இவ் யுத்தம் சனாதிபதி சந்திரிகா விரும்பி வருகின்றதோ அன்றி விரும்பாது வருகின்றதோ என்பது முக்கிய கேள்வி இது தற்போதைய சூழ்நிலையில் கேட்கப்படுவது தவிர்க்க முடியாததாகிறது.

சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்தும் இன்றும் யுத்தம் விரும்பத்தக்கதாக இல்லை. ஏனெனில் யுத்தம் ஒன்று ஆரம்பமாகும் பட்சத்தில் சிங்கள வாக்காளர்களின் பெருமளவான வாக்குகளைச் அவர் இழக்கவேண்டி வரலாம். ஏனெனில் மக்களில் பெரும்பான்மையோர் யுத்தத்தை வெறுப்பவர்களாகவே உள்ளனர். ஆனால் சனாதிபதி சந்திரிகா விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி சனாதிபதி சந்திரிகா யுத்தத்தை நிறுத்த நடவடிக்கை எடுக்காத நிலையில் யுத்தம் என்பது தவிர்க்கமுடியாததாகிவிடும். வேறுவிதமாகக் கூறுவதானால் சமாதான முயற்சி முன்னெடுக்கப்படாத நிலையில் யுத்தம் தவிர்க்கப்பட முடியாததாகவே இருக்கும்.

இத்தகையதொரு சூழ்நிலையில் சனாதிபதி சந்திரிகாவின் எதிர்கால அரசியல் அபிலாசைகள் யாவும் நிராசையாகிவிடக் கூடிய சூழ்நிலையே ஏற்படும். ஏனெனில் யுத்தம் ஒன்றின்போது அரசியல் காய்நகர்த்தலுக்கு தற்போதைய சூழ்நிலை போன்று சாதகமான சூழ்நிலை இருக்க மாட்டாது.

ஆனால் அரசியலில் வாங்கி விற்றல் சாத்தியமாகாது போனால் யுத்தமே சனாதிபதியின் தெரிவாக இருக்க முடியும். ஏனெனில் அவர் ஆட்சி அதிகாரத்தைச் சட்டவரம்புகளுக்கு மீறியதாக அறிவிப்பதற்கு யுத்தம் இடம் அளிக்க வாய்ப்புண்டு.ஆனால் யுத்தமா? சமாதானமா? என்பதை இன்று தெரிவு செய்வது சனாதிபதிக்குச் சிரமமாக இருக்கலாம். ஆனால் சனாதிபதியால் செய்யப்படும் காலதாமதம் யுத்தமே முடிவு என்ற நிர்ப்பந்தத்தை உருவாக்கி விடும்.

# ஆலயக்கேணியில் இருந்து சிறுவன் சடலமாக மீட்பு

(பருத்தித்துறை)

வீட்டில் இருந்து அம்மம்மாவின் வீட்டிற்குச் செல்கிறேன் எனக் கூறி விட்டு சென்ற 13 வயதுச் சிறுவன் கேணியில் சடலமாக மீட்கப்பட்டார்.

இத்துன்பியல் சம்பவமானது நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வியாபாரி மூலை இம்பர் சிட்டி விநாயகர் ஆலயக் கேணியிலேயே இடம்பெற்றுள்ளது.

பழவத்தை வியாபாரி மூலையைச் சேர்ந்த தேவராஜா தேவகுமார் என்ற சிறுவனே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். மேலும் இது பற்றித் தெரியவருவதாவது:- முதல் தினம் வியாழன் மாலையே இச்சிறுவன் அம்மம்மாவின் வீட்டிற்குச் செல்வதாகப் புறப்பட்டுள்ளான் அன்று மாலையே இச் சிறுவன் கேணியில் உயிரிழந்துள்ளான். வழமையாக அம்மம்மா வீட்டிற்குச் சென்று தங்கி நிற்பவர் என்பதனால் வீட்டில் சிறுவனைத் தேடாது விட்டுள்ளனர். மறுநாள் காலை 9.00 மணிக்கு கேணியில் நீராடச் சென்ற மூதாட்டியே கண்டுள்ளார். இவர் வழமையாக இக்கேணியில் நீராட வருவதுண்டு. மேற்படி மூதாட்டியே அயலவர்களுக்கு விடயத்தைக் கூறி அங்கு சென்ற அயலவர் சடலத்தை அடையாளம் கண்டு வீட்டினருக்குத் தகவல் கொடுத்தனர். இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை பொலிசாருக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த பொலிசார் சம்பவம் தொடர்பான விசாரணை செய்து நீதவானுக்குத் தகவல் கொடுக்க மதியம் 2.00 மணிக்கு பதில் நீதவான் தங்கராசா சம்பவ இடத்திற்கு வருகை தந்தார். இதன் பின்னே சிறுவனின் சடலம் வெளியில் எடுக்கப்பட்டு மரண விசாரணை நடத்தி சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக அனுப்புமாறு உத்தரவிட்டார். மந்திகை அரசினர் வைத்தியசாலையில்



வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை பிரேத பரிசோதனையை மேற்கொண்டார். மாலை வீட்டாரிடம் சடலம் கையளிக்கப்பட்ட இச் சிறுவன் பருத்திததுறை வேலாயுதம் மாக வித்தியாலயத்தில் எட்டாம் தரம் கல்வி பயின்றிய மாணவராவார். (கா)

# சனாதிபதித் தேர்தல் ஒன்று எதிர்காலத்தில் நடைபெறாது

### தான் சொன்னது பொய்யானதில்லை என்கிறார் அனுரா

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க எதிர் வரும் 10 ஆண்டுகளுக்கு இந்த நாட்டில் மக்கள் தலைவியாக இருப்பார் என சுற்றுலாத்துறையமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

குருணாகலையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவா இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்:-

எதிர்காலத்தில் சனாதிபதித் தேர்தல் ஒன்று நடக்காது என்றும் அனுரா பண்டாரநாயக்க சுட்டிக் காட்டியுள்ளார். தான் கூறிய எதுவும் இதுவரை பொய்யானது இல்லையென்றும் தெரிவித்தார். மேலும் மக்களின் பலம் இருக்குமானால் நமக்குத் தேவையானதை யாப்பிற்கேற்பவும்; சட்டத்திற்கிணங்கவும், மேற்கொள்ளுவோம் என ஐக்கிய தேசியக் கட்சிக்கு கூறுகின்றோம். யார் வேண்டுமானாலும் வீதியில் செல்லலாம். நாங்கள் எமது பயணத்தை தொடருவோம் இன்னும் 10 ஆண்டுகளுக்கு மக்கள் தலைவியாக சனாதிபதி சந்திரிகா இருப்பார் இது எனது எதிர்வு கூறல் ஆகும் எனவும் அனுரா பண்டாரநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

# இனப்பிரச்சினை தீர்வு விவகாரத்தில் அரசு சரியான பாதையில் செல்கிறதாம்

### -மல்வத்த பீட நாயக்கர் கூறுகிறார்

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகான அரசாங்கம் இப்பொழுது சரியான பாதையில் சென்று கொண்டிருக்கின்றதென்று மல்வத்த பீட மகாநாயக்கர் அதி சங்கைக்குரிய திக்கட்டு வாவே சிறிசித்தாந்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

இந்த முயற்சிக்கு மகாசங்கமும் பங்களிப்புச் செய்யுமென்றும் அவர் கூறியுள்ளார்.

கதிர்காமத்தில் இடம்பெற்ற சமய வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இந்த முயற்சி தொடர்பாக சனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் விளக்கிக் கூறவிருப்பதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# தென்மாகாணத்தில் பரவிவரும் நோய்க்கு நேற்றும் மாணவி பலி

தென்மாகாணத்தில் தீவிரமாக பரவிவரும் நிமோனியா நோய்க்கு சமமான நோயினால் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளர்.

இது வரையில் இந்த நோயினால் 5 பேர் உயிரிழந்தள்ளனர். 17 வயதுடைய மாணவியே நேற்று முன்தினம் இந் நோயினால் உயிரிழந்துள்ளார்.

இதேவேளைமேலும் 9 பேர் கொழும்பு ஐ.டி.எச் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரக் காலம் முடிவடைந்தது

### -நடவடிக்கைகள் அனைத்தும் ஸ்தம்பிதம்

லஞ்ச ஆணையாளர் திணைக்களத் தில் மூவர் அடங்கிய குழு வின் அதிகாரங்கள் யாவும் இம் மாதம் 13 ஆம் திகதி முடிவடைந்துள்ளது. ஆகவே லஞ்ச ஊழல் சம்பந் தமாக சகல நடவடிக்கைகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

முன்னாள் மேல் நீதி மன்ற நீதியரசர் ஆனந்தகுமாரசுவாமி ஆணையாளர் சபையின் தலைவராகவும், ஓய்வு பெற்ற நீதிபதி விக்கினராஜா, ஓய்வு பெற்ற உதவி பொலிஸ்மா அதிபர் கிங்ஸ்லி விக்கிரம சூரியா ஆகியோரும் இதில் அங்கம் வகித்துள்ளனர்.

புதிய அங்கத்தவர்கள் முன்னைய மேல் நீதிமன்ற நீதியரசர் அமீர்ஸ்மாயில், பி.எதிரிசூரியா ஆகியோர்கள், ஒரு மாதங்களுக்கு முன்னதாக சனாதிபதியினால் நியமனம் வழங்கப்பட்டது. ஆனால் இது வரை இந் நியமனங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

# சிறைச்சாலைக்குள் கையடக்கத் தொலைபேசி எடுத்துச் செல்லத்தடை விதிப்பு

சிறைச்சாலையின் உயர் அதிகாரிகளைத் தவிர்ந்த ஏனைய அதிகாரிகளுக்குச் சிறைச்சாலை கட்ட்டத்திற்குள் கையடக்கத் தொலைபேசி எடுத்துச் செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இக் கட்டளையை சிறைச்சாலை ஆணையாளர் றூமிமர்சூக் பிறப்பித்துள்ளார்.

சிறைத்தண்டனை அனுபவித்து வரும் சில சிறைக் கைதிகள் கையடக்கத் தொலை பேசிகளை சிறைச்சாலை அதிகாரிகளிடம் இருந்து அதிக விலை கொடுத்து வாங்குவதால் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும், தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் நூற்றுக்கு மேற்பட்ட கையடக்கத் தொலை பேசிகள் கைதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

# 20 பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு பாதாள உலக கோஷ்டியுடன் தொடர்பு!

**- அம்பேபிட்டிய கொலை விசாரணையில் திடுக்கிடும் தகவல்**

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலை தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வந்த விசேட குற்றப் புலனாய்வுத் துறையினர் பாதாள உலக குழுவுடன் தொடர்புடைய 20 பொலிஸ் உயரதிகாரிகளை அடையாளம் கண்டுள்ளனர்.

இக்கொல்லை தொடர்பாக கொலையின் சூத்திரதாரியான போதைப் பொருள் வர்த்தகர் பெட்டை நவ்பர், உட்பட 6 பேர் ஏற்கனவே கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். குற்றப் புலனாய்வுத்துறையினர் தொடர்ந்து மேற்கொண்ட விசாரனைகளின் படி 3 பிரதி பொலிஸ்மா அதிபர்களுடன் பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள், பிரதம இன்ஸ்பெக்டர்கள் என இந்த 20 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். மேற்கு மற்றும் தெற்கு பொலிஸ் பிரிவுகளில் பணியாற்றும் மற்றும் பணியாற்றி வந்த இவர்களில் பொலிஸ் தலைமையகத்தில் பணியாற்றியவர்கள், விசேட குற்றப் புலனாய்வு தலைமையகத்தில் பணியாற்றியவர்கள் மற்றும் கோட்டே, வாழைத்தோட்டம் பொலிஸ் நிலையங்களில் பணியாற்றி வந்த அதிகாரிகளும் அடங்குகின்றார்கள். இவர்கள் பற்றிய விபரங்கள் அனைத்தும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஊடாக சனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## படகு மூலம் தாயகம் திரும்பினர்

கோயம்புத்துார் மாவட்டத்திலிருந்து 10 பேர் நேற்று முன்தினம் தாயகம் திரும்பியுள்ளனர்.

இவர்கள் இராமேஸ்வரத்திலிருந்து வத்தையில் புறப்பட்டு தீடை என அழைக்கப்படும் மணற்புட்டியில் இறக்கிவிடப்பட்டனர். இவர்களை கடற்படையினர் தமது படகில் அழைத்து வந்து தலைமன்னார் பொலிசார் மூலம் நேற்றுக் காலை மன்னார் நீதிமன்றில் முன் நிறுத்தப்பட்டுஅவர்களது சொந்த இடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (18)

## கொழும்பு குண்டு வெடிப்புத் தொடர்பில் கைதானவர் விளக்கமறியலில்

கொழும்பில் கடந்தவாரம் சாருக்கான் பங்குபற்றிய இசை நிகழ்ச்சியொன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச்சம்வம் தொடர்பாக கொழும்பு பொலிசார் சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறிப்பிட்ட நபரை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்திரவிட்டுள்ளார். அவருடன் அவருக்குச் சொந்தமான உந்துருளி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும். மேற்படி நபர் சந்தேகத்தின் பேரில் மாத்திரமே கைது செய்யப்பட்டிருக்கிறார். எனினும். இது தொடர்பான பின்னணி விவரங்கள் பற்றி பொலிசார் விசாரித்து வருவதாகவும் இது தொடர்பான மேலதிக விவரங்கள் இன்னமும் வெளியாகவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை கொழும்பில கடந்த வாரம் சாருக்கான் பங்குபற்றிய இசை நிகழ்ச்சியில் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதாகச் சந்தேகிக்கப்படும் இருவரை கைது செய்ய பொலிசார் மக்களின் உதவியைக் கோரியிருக்கின்றார்கள்.

இந்தக் குண்டுத்தாக்குதலில் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போதே குறிப்பிட்ட நபர் இருவரும் இதில் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தையடுத்து கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் அதிகாரி சரத்நு கேகொட தெரிவித்துள்ளார்.

### நோயாளர்...

கரடிபோக்கு சந்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து பின்புறமாக திரும்பிக் கொண்டிருந்த பாரவூர்தி ஏ-9 சாலையிலிருந்து உருத்திரபுரம் வீதிக்கு தீரும்பிய நோயாளர் காவு வண்டியுடன் மோதியது பாரவூர்தியின் பின்புரம் நோயாளர் காவு வண்டியுடன் மோதியதால் நோயாளர்காவு வண்டி சிறிய சேதத்திற்குள்ளானது. (ச)

### மட்டு...

அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவர் அந்த இடத்திலேயே இறந்துள்ளார். சடலம் ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. ஏறாவூர் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### மலையகத்தில்...

வெளியிடும் போது இது தமிழர்களுக்கு எதிராக சக்திகளின் மற்றும் ஒரு நடவடிக்கை எனத் தெரிவித்தார். மலையக சமூகத்தில் புதிய சிந்தனை ஏற்படும் போதெல்லாம் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து அதனை நசுக்கி வந்த நடவடிக்கைகளை இந்த தொழிற்சங்கம் முன்பும் மேற்கொண்டு வந்தது. இது தமது சுயநல செயற்பாடுகளுக்கு குந்தகம் விளைவிக்கும் என அது நினைப்பதே இதற்கான காரணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ள்ார்.

இந்த விடயம் தொடர்பில் தொழிலாளர் காங்கிரஸ் முக்கியஸ்தரும் தோட்ட உட் கட்டமைப்பு மற்றும் வீடமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சருமான முத்து சிவலிங்கத்திடம் வினவிய போது குறிப்பிட்ட கூட்டத்தில் ஏனைய விடயங்களே பேசப்பட்டதாகவும் தீவிரவாதிகள் ஊடுருவியதாக எந்த விடயமும் பேசப்படவில்லை என்றும் குறிப்பிட்டார். (32)


## கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 06 - 09 - 1947



விண்ணில் 16 - 12 - 2004

### அமரர் கதிரவேலு சபாரத்தினம்

*சபாரத்தினம் (நல்லைசிவம் அரிசிஆலை உரிமையாளர்)* அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

**அம்மன் பல்பொருள் வாணிபம், கபிலன் சர்வதேச தொலைத்தொடர்பகம், பாண்டியன்குளம்**

(சி.11042)


## சமகால அரசியல் நிலைதொடர்பாக மன்னாரில் நேற்று கருத்தரங்கு

மன்னார் நகர மண்டபத்தில் நேற்றுக்காலை 10.00 மணிக்கு இன்றைய சமகால அரசியல் நிலவரம் சம்பந்தமான கருத்தரங்கு மன்னார் அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை மாவட்ட செயலாளர் மாந்தையூர் தாஸ் தலைமையில் இடம் பெற்றது.

இதில் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, மன்னார் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இனியவன், மன்னார் நகர பொறுப்பாளர் வசந்தன் தொழிற் சங்கங்களின் இணையத்தின் பொறுப்பாளர் ஈழப்பிரியன், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பெருமளவானோர் கலந்து கொண்டனர். (18)

## புவியியல் பாடம் கற்கும் மாணவர்களுக்கு நிலஅளவை செயல்முறை வகுப்பு

தமிழீழக்கல்விக் கழகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள 2005 தேர்வில் தோற்றவுள்ள புவியியல் பாடம் கற்கும் உயர்தர மாணவர்களை கீழ்வரும் நாட்களில் குறித்த பள்ளிகளில் "நிலஅளவை" செயன்முறை வகுப்பில் பங்குபற்றுமாறு தமிழீழக் கல்விக் கழகத்தினர் கேட்டுள்ளனர்.

20.12.2004-21.12.2004 (திங்கள், செவ்வாய்) கிளி. முருகானந்தா ம.வி 26.12.2004-27.12.2004 (ஞாயிறு, திங்கள்) கிளி.வட்டக்கச்சி ம.வி 29.12.2004-30.12.2004 (புதன், வியாழன்) மு.பாரதிவித்தியாலயம் (றெட்பானா) 02.01.2005-03.01.2005 (சனி, ஞாயிறு) மு.புதுக்குடியிருப்பு ம.வி

மேற்படி நாட்களில் காலை 9மணி தொடக்கம் மாலை 5மணி வரை வகுப்புக்கள் நடைபெறும். மதிய உணவை கொண்டு வருமாறும் மாணவர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

## வங்குரோத்து நிலையில் ஜே.வி.பி ஊடகங்கள் மீது வீண்பழி சுமத்துகிறது

நடுநிலை ஊடகங்கள் மீது தற்போது ஜே.வி.பி. வீண் பழி சுமத்தும் படலத்தை ஆரம்பித்திருப்பது அதன் அரசியல் வங்குரோத்து தன்மையை காட்டுவதாக ஸ்ரீல.மு.கா .தவிசாளர் சேகுதாவூத் பசீர் (பா.உ) விமர்சனம் செய்துள்ளார்.

நேற்று மாலை ஏறாவூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு அலுவலக உபகரணங்களை கையளிக்கும் வைபவத்தில் உரையாற்றிய அவர் ஜே.வி.பி. யின் போக்கு குறித்து அதிருப்தியான கருத்துக்களை வெளியிட்டார் சமத்துவம், சம உரிமை என்று கூறும் ஜே.வி.பி. இன்று நாட்டில் பௌத்த பேரினவாதத்தை கக்குவதில் முன்னணி வகிக்கின்றது. இதன் காரணமாகவே தமிழ், முஸ்லிம் மக்கள் அரசியலில் தற்போது மிகவும் கூர்மையுடன் இருக்கின்றார்கள். அண்மையில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டுத் தலைமை நாடுகள் ஜே.வி.பி. தொடர்பாக சனாதிபதிக்கு கொடுத்த அழுத்தம் அந்த கட்சியினுடைய சமாதான விரோதப் போக்குகளை சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்தியுள்ளது என்றும் அவர் தனது உரையில் மேலும் குறிப்பிட்டார்.

### ஐ.தே.க...

யுள்ளார். இருந்த போதிலும் நடைமுறையில் உள்ள யுத்த நிறுதத உடன்படிக்கையினை தொடர்ச்சியாக கடைப்பிடிப்பது தொடர்பில் இரு தரப்பும் ஒருமித்த கருத்தை கொண்டிருப்பதாக எரிக் சூல் ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

### உழவு...

மேலேறியது. படு காயமடைந்த இவரை கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்து வரும் போது இடையில் சாவடைந்துள்ளார். வட்டக்கச்சி இராமநாதபுரம் 641 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த நாகேஸ்வரன் ஆதீசன்(வயது-13) என் பவரே மேற்படி சம்பவத்தின் போது உயிரிழந்தவராவார்.

### நிறுத்தாது...

தடுத்து நிறுத்திய போது அது வேகமாகச் சென்றதையடுத்து அதனை நிறுத்துவதற்காக துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இருப்பினும் குறிப்பிட்ட 2 இளைஞர்களும் சம்பவம் இடம் பெற்ற இடத்திற்கு சற்று தொலைவில் உந்துருளியைக் கைவிட்டு தப்பிச் சென்றுள்ளார்கள். பொலிசாரால் உந்துருளி கைப்பற்றப்பட்டுள்ளது.

### திருமலை...

பெற்றுள்ளன. கடந்த வியாழக் கிழமை தொடக்கம் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 500 ரூபாவுக்கு பெறுமதியான உணவுப் பொதிகளை வழங்கி வருகின்றது.

த.பு.கழகத்தின் பணியாளர்கள் கடந்த வியாழக்கிழமை புட்வைக் கட்டு, திரியா, குச்சவெளி, கும்புறுப்பிட்டி போன்ற இடங்களுக்கும் சென்று பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிட்டு இடம்பெயர்ந்த தமிழர், சிங்கள, முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த 500 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகளை வழங்கியுள்ளார்கள்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வேறொரு பணியாளர்கள் குழு கடந்த வெள்ளியன்று திருமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் மழைமுந்தல், பாட்டாளிபுரம், பள்ளிக்குடியிருப்பு, சந்தோசபுரம் போன்ற பகுதி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொதிகளை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


## திரு இங்கிலிஷ் - திருநகர்

**ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க**

- O/L பரீட்சை முடித்தவர்களுக்கான முழுநாள் விசேட ஆங்கில வகுப்புக்கள்

ஜனவரி 05 ஆரம்பம்

வார நாட்களில் காலை 7.30 மணிமுதல் 5.30மணிவரை

- வயது வந்த ஏனையோருக்கான பகுதிநேர வகுப்புக்கள் ஜனவரி 10 ஆரம்பம்

பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்யவும்.

(சி.10983) நிர்வாகம்



## சாவு அறிவித்தல்

### நாகேஸ்வரன் ஆதிஸ்

இலக்கம் 641,7ஆம் யூனிட் இராமநாதபுரத்தைச் சேர்ந்த நாகேஸ்வரன் ஆதீஸ் 18.12.2004 அன்று அகாலச்சாவு அடைந்துவிட்டார். அன்னார் நாகேஸ்ரவன் சிவயோகலட்சுமி தம்பதிகளின் மகனும், புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஐயாயிரம் செல்லையா - செல்லம்மா தம்பதிகளினதும், நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த தம்பிஐயா கனகம்மா தம்பதிகளினதும் அன்புப் பேரனும் நிசாந்தினி, லக்ஸ்சிகா, இலக்கியா,ஆதித்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை மாணவனுமாவார். அன்னராது இறுதிக்கிரியைகள் இன்று 19.12.2004 ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இராமநாதபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்,
குடும்பத்தினர்.

(சி11043)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.